'தமிழன்' பத்திரிகை வீடுகளுக்கு நேரடியாக விநியோகிக்கப்படும். QR ஐ ஸ்கேன் செய்து தகவல்களை பெற்றுக்கொள்ளுங்கள்.

Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 249 சோபகிருது வருடம், வைகாசி மாதம் 24ஆம் திகதி புதன்கிழமை (07.06.2023) ஹிஜ்ரி 1444, துல்கஃதா - 17, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50

## கம்பளையில் நிலநடுக்கம்

நா. தினுஷா

கம்பளை பிரதேசத்தில் நேற்று முன்தினம்(05) இரவு சிறியளவான நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளதாக புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

அன்றைய தினம் இரவு 10.49 மணியளவில் இந்த நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளதுடன் 2 ரிச்டர் அளவில் இந்த நிலநடுக்கம் பதிவாகியுள்ளதாக அந்தப் பணியகம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. » 02 பக்கம்



# துரித கதியில் காணி விடுவிப்பு!

### யாழில் படையினர் வசமிருக்கும் நிலங்கள் தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் முயற்சியில் விசேட கலந்துரையாடல்

நமது நிருபர்

யாழ். மாவட்டத்தில் படையினர் வசமிருக்கும் காணிகளை விடுவிப்பது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முன்முயற்சியில், ஜனாதிபதியின் பணிக்குழு பிரதானி சாகல ரத்நாயக்க தலைமையில் நேற்று (06) நடைபெற்றது.

ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில், காணிகளை விடுவிப்பது தொடர்பாக தீர்மானம் மேற்கொள்ளக்கூடிய ..... 02 பக்கம்

## டயனாவின் எம்.பி. பதவி இரத்தாகுமா?

### நீதிமன்றத் தீர்ப்பு ஜூலை 25 இல்

இராஜாங்க அமைச்சர் டயனா கமகேவின் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இரத்துச் செய்யும் ரிட் உத்தரவினை பிறப்பிக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான தீர்ப்பின் அறிவிப்பு எதிர்வரும் ஜூலை 25ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.



குறித்த வழக்கானது நேற்று (06) மேன் முறையீட்டு நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வழக்கின் தீர்ப்பு நேற்றைய தினம் அறிவிக்கப்படவிருந்தது. எனினும், குறித்த தீர்ப்பு எதிர்வரும் ஜூலை 25 ஆம் திகதி அறிவிக்கப்படும். 02 பக்கம்



### இணையவழிக் குற்றங்கள்

## ஒருநாளில் 190 முறைப்பாடுகள்

கே. சுபானி

நாட்டில் இணையவழிக் குற்றங்கள் தொடர்பில் நாளொன்றுக்கு சுமார் 190 முறைப்பாடுகள் பதிவாகுவதாக கணினி அவசர உதவி தயார்நிலைக் குழுவின் சிரேஷ்ட தகவல் பாதுகாப்புப் பொறியியலாளர் சாருக தமுனுபொல தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், 02 பக்கம்

## ஆரம்ப சேவை பதவிகளில் ஈடுபடுவோருக்கு பாரிய அநீதி

### உடனடியாக கவனம் செலுத்துமாறு சஜித் கோரிக்கை

ஆரம்ப சேவை பதவிகளில் ஈடுபடுவோருக்கு தரத்தின் அடிப்படையில் பதவி உயர்வு பெற முடியாத சூழ்நிலை உருவாகியுள்ளதாகவும் இது பாரதூரமான மனிதாபிமானப் பிரச்சினை என்பதால் உடனடியாக கவனம் செலுத்துமாறும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பாராளுமன்றத்தில் நேற்று (06) கோரிக்கை விடுத்தார். 02 பக்கம்



## ஊழல் எதிர்ப்புச் சட்டமூலத்தின் சில பிரிவுகள் முரணானவை

### உயர் நீதிமன்றத் தீர்ப்பை சபையில் அறிவித்தார் சபாநாயகர்

கே. சுபானி

அரசியலமைப்பின் 121 (1)ஆம் உறுப்புரையின் பிரகாரம், உயர் நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தப்பட்ட 'ஊழல் எதிர்ப்பு' சட்டமூலம் தொடர்பில் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு தனக்கு அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று (06) சபையில் அறிவித்தார். 02 பக்கம்

### உஷ்



பாராளுமன்ற நிதிக்குழுவின் விசேட கூட்டமொன்று இன்று பாராளுமன்றத்தில் இடம்பெறவுள்ளது.

ஜனாதிபதி தலைமையில் இடம்பெறவுள்ள இந்த கூட்டத்தின்போது பாராளுமன்றத்தின் நிதிக்குழுவின் தலைமைப் பொறுப்பு ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. ஹர்ஷ டி சில்வாவிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக தெரிகிறது.

எதிர்க்கட்சி எம்.பிக்களை வளைக்கும் ரணிலின் திட்டத்தின் முதற்கட்டமே இன்று அரங்கேறுவதாக அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

### கமெண்ட் கந்தர்...



சரியாய் பார்த்தால் அரசியல்வாதிகள் செய்த அநியாயங்களுக்காக மக்களுக்குத்தான் இழப்பீடு வழங்கப்படவேணும் பாருங்கோ..!



## இரகசியம் பேணுவதற்கு எதுவும் கிடையாது

### ஒளிபரப்பு அதிகார சபை சட்டமூலம் தொடர்பில் அமைச்சர் பந்துல கருத்து

நா. தினுஷா

ஒளிபரப்பு அதிகார சபை சட்டமூலம்... 02 பக்கம்

## கப்பல் விபத்துகளை ஆராய விசேட குழு

இலங்கை கடற்பரப்புக்குள் நிகழ்ந்த நியூ டயமன்ட் மற்றும் எக்ஸ்பிரஸ் பேர்ள் ஆகிய கப்பல்களின் விபத்துகள் தொடர்பில் ஆராய்ந்து தேவையான விதப்புரைகளைச் சமர்ப்பிப்பதற்கான பாராளுமன்ற விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன சபையில் நேற்று (06) அறிவித்தார்.

அந்தக் குழுவில் பணியாற்றுவதற்காக அமைச்சர் ரமேஷ் பத்திரண தலைமையில் 14 பாராளுமன்ற உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

அதன்படி அந்த விசேட குழுவின் உறுப்பினர்களாக அமைச்சர்களான சுரேன் ராகவன், டயனா கமகே, பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், ரவூப் ஹக்கீம், விஜித ஹேரத், கலாநிதி சரத் வீரசேகர, நிரோஷன் பெரேரா, அஜித் மான்னப்பெரும, நிமல் லான்சா, துஷார இந்துனில்... 02 பக்கம்






# அரசுக்கு ஆதரவளிக்கும் சு.க. அமைச்சர்களை நீக்கும் தீர்மானத்திலிருந்து பின்வாங்கினார் மைத்ரி

அரசாங்கத்துக்கு ஆதரவளித்து அமைச்சு பதவிகளை ஏற்றுக்கொண்டுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களின் கட்சி அங்கத்துவத்தை தற்காலிகமாக இரத்து செய்வதற்கு எடுக்கப்பட்டிருந்த தீர்மானத்தை நீக்குவதற்கு முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன தலைமையிலான சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கை அடுத்தே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மத்திய செயற்குழு கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு நிமல் சிறிபால டி சில்வாவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தபோதிலும், அவர் கலந்துகொள்ளவில்லை என்றும் மத்திய செயற்குழுவின் தீர்மானம் நீக்கப்பட்டாலும் அவர்கள் கட்சியிலிருந்து அரசாங்கத்தரப்புக்கு சென்றமை தவறு என்ற நிலைப்பாட்டிலேயே கட்சி உறுப்பினர்கள் அனைவரும் இருப்பதாக சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர எம்.பி. தெரிவித்தார்.

கட்சியின் செயற்குழு கூட்டம் நேற்றுமுன்தினம் (05) அதன் தலைமையகத்தில் இடம் பெற்றிருந்தது. அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

நிமல் சிறிபால டி சில்வா வழக்கு தாக்கல் செய்துள்ளார். அதற்கமைய, மத்திய செயற்குழுவுக்கு பங்களிக்குமாறு அழைப்பு விடுத்திருந்தோம். ஆனால், அவர் பங்கேற்கவில்லை.

ஏனையவர்களுக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளோம். குறிப்பாக சிவில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பின் தொடர்பில் கலந்துரையாடியதன் பின்னர் உங்களால் முன்வைக்கப்பட்ட திருத்தத்துக்கமையவே அந்தக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்த தற்காலிகமான கட்சி அங்கத்துவத்தை இரத்துச் செய்தல் என்ற விடயத்தை நீக்குவதாக மத்திய செயற்குழுவுக்கு அறிவித்திருந்தோம். அதற்கமைய, அதற்கான மாற்று கடிதங்கள் அனுப்பி வைக்கப்படும்.

அதற்காக கடந்த காலங்களில் மத்திய செயற்குழுவினால் எடுக்கப்பட்ட தீர்மானங்களில் மாற்றம் ஏற்படாது. அவர்கள் கட்சியிலிருந்து சென்றமை தவறு என்ற நிலைப்பாட்டிலேயே நாங்கள் இன்னும் இருக்கிறோம்.

ஜனாதிபதி தேர்தலுக்கு, கட்சி தலைவர் மைத்ரிபால சிறிசேனவையே வேட்பாளராக நியமிக்க தீர்மானித்துள்ளோம். தேர்தல் அறிவிக்கப்பட்டதன் பின்னரே எவ்வாறு போட்டியிடுவது என்பது குறித்து தீர்மானிப்போம் என்றார்.

# சட்டவிரோதமான முறையில் அரச காணிகள் விற்பனை

## சபையில் தகவல் வெளியிட்டார் மரிக்கார் எம்.பி.

பொருளாதார ஸ்திரத்தன்மை என்று குறிப்பிட்டு தேர்தல்களை காலந்தாழ்த்திவிட்டு, அதன் பின்னணியில் அரசாங்கத் தரப்பினர் நாட்டிலுள்ள சொத்துகளை தனியாருக்கு விற்பனை செய்து வருகிறார்கள். காணி மோசடிகள் அதிகரித்துள்ளன. ஹந்தானை மற்றும் கட்டானை அகிய பிரதேசங்களில் 25 ஏக்கர் காணிகள் தனியாருக்கு சட்டவிரோதமாக வழங்கப்பட்டுள்ளன. இதுதொடர்பில் தீவிர விசாரணைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் நேற்று (06) சபையில் கோரிக்கை முன்வைத்தார்.

ஜனநாயகத்தின் மகத்துவம் பற்றி தமக்கு கற்பித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கை தற்போது மாறிவிட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பாராளுமன்ற விவாதத்தில் நேற்று கலந்துகொண்டு உரையாற்றும்போதே இதனைக் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஐக்கிய தேசியக் கட்சிக்கும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் தற்போது தேர்தலை நடத்துவதற்கான எண்ணம் இல்லை. இவ்வளவு காலமும் தேசிய பாதுகாப்பு என்ற சொல்லை தமது தேவைகளுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டார்கள். தற்போது புதிதாக அரசியல் ஸ்திரத்தன்மை என்ற விடயத்தை பிடித்துக்கொண்டுள்ளார்கள். பொருளாதார ஸ்திரத்தன்மை ஏற்படும் வரையில் தேர்தலை நடத்தமாட்டோம் என்று கூறுகிறார்கள். ஜனாதிபதி கூறுவருவதுபோன்று, 2048ஆம் ஆண்டே பொருளாதார ஸ்திரத்தன்மை ஏற்படும். தற்போது, ஜனாதிபதிக்கு 74 வயதாகும். அவ்வாறாயின் அவருக்கு 99 வயதாகும் வரையில் ஜனாதிபதி கதிரையில் இருந்துகொண்டு பொருளாதாரம் சீரானதும் தேர்தலை நடத்தவேண்டும் என்று கூறிக்கொண்டிருப்பார்கள்.

ஜனாதிபதிக்கும் அவரின் சார்பானவர்களுக்குமே தேர்தல் அவசியமில்லை. புதிதாக வருமானம் அதிகரிக்கப்படவில்லை. இருக்கும் சொத்துகளை விற்பனைசெய்யவே முயற்சித்து வருகிறார்கள். கஷ்டத்தின் பின்னணியில் இருக்கும் மக்களுக்கே தேர்தல் அவசியம்.

ஜனநாயகத்தை இல்லாமலாக்க சர்வாதிகாரிகள் முயற்சிப்பார்கள் என்றால் அந்த யுகம் தற்போது இல்லை. தற்போது நாட்டில் இடம்பெற்றுவரும் காணி அபகரிப்பு அல்லது காணி மோசடிகள் தொடர்பில் விசாரணை செய்ய ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கவேண்டும். ஜனாதிபதிக்கு 99 வயதாகும் வரையில் மேலும் 25 வருடங்கள் அவரை இந்த பதவியில் வைத்து நாட்டின் ஜனநாயகத்தை இல்லாமல் செய்ய நாட்டு மக்கள் தயாராக இல்லை. அதனால், தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும் என்றார்.



டுபாயிலிருந்து சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட கார்கள், வாகன உதிரிப்பாகங்கள் உள்ளிட்ட பல்வேறு பொருட்கள் சுங்கத் திணைக்கள அதிகாரிகளால் நேற்று (06) சோதனைக்குட்படுத்தப்பட்டன. இவற்றின் மொத்தப் பெறுமதி 35 கோடி ரூபாவுக்கும் அதிகமாகுமென அதிகாரிகள் தெரிவித்தனர். (படப்பிடிப்பு: ஏஷான் தசநாயக்க)

# பல இடங்களில் சீரற்ற காலநிலை

## மாணவர்கள் பாதிக்கப்பட்டால் 117 என்ற இலக்கத்துக்கு அழைக்குமாறு வேண்டுகோள்

**நா. தினுஷா**

நாட்டின் பல்வேறு பாகங்களில் நிலவும் சீரற்ற காலநிலையினால் பாதிப்படையும் கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் 117 என்ற நேரடி அழைப்பு இலக்கத்துக்கு அழைப்பு விடுக்குமாறும் அவர்களுக்கு தேவையான உதவிகளை உடனடியாக பெற்றுக்கொடுக்க தயாராக இருப்பதாகவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர் சுதந்த ரணசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று (06) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

நாட்டில் ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றத்தின் காரணமாக, ஏற்பட்ட மழையுடனான வானிலையால் 05 மாவட்டங்களைச் சேர்ந்த 17 பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட பிரதேசங்களுக்கு அனர்த்த நிலை உருவாகியுள்ளது. அதற்கமைய, நேற்று காலை வரையான 24 மணிநேரத்தில் மொத்தமாக 112 குடும்பங்கள் பாதிப்படைந்துள்ளன. மழை வீழ்ச்சியினால் வெள்ளப்பெருக்கு ஏற்படக்கூடிய பிரதேசங்களுக்கு படகுகளை பயன்படுத்துவதற்கான சகல திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மழைவீழ்ச்சியின் அடிப்படையில் எடுத்துக்கொண்டால் மத்துகம பிரதேசத்தில் 131 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் பதுளை பிரதேசத்தில் 117 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் பதிவாகியுள்ளது. அதற்கு மேலதிகமாக, காலி, களுத்துறை, நுவரெலியா, இரத்தினபுரி மற்றும் கொழும்பு ஆகிய பிரதேசங்களிலேயே அதிக மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. மத்துகம, பாலிந்த பிரதேசத்துக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட தரப்பினர்களுக்கான உணவுகளை விநியோகித்தல் உள்ளிட்ட உதவிகளை வழங்க அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் நடவடிக்கை எடுத்துள்ளது.

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு இயற்கை அனர்த்தங்களினால் ஏதாவது ஆபத்து ஏற்படுமிடத்து 117 என்ற நேரடி அழைப்பு இலக்கத்துக்கு அழைப்பு விடுக்கமுடியும் எனக் குறிப்பிட்டார்.

### துரித கதியில்...

குழுவொன்றை நியமிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புத் தரப்பினரையும் பொலிஸாரையும் உள்ளடக்கிய குறித்த குழு குறுகிய காலப் பகுதிக்குள், அதிகபட்சமாக விடுவிக்கக் கூடிய காணிகளை அடையாளப்படுத்த வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதேபோன்று, வலி வடக்கு பிரதேசத்தில் கடந்த 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அரசுடைமையாக்குவது தொடர்பாக வர்த்தமானி வெளியிடப்பட்ட சுமார் 6000 ஏக்கர் காணிகளுள் சுமார் 3000 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டிருப்பதால் குறித்த வர்த்தமானியை மீளப் பெறுவதற்கான அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், காணி விடுவிப்பு தொடர்பான தெளிவூட்டல்களை மக்களுக்கு வழங்கி, மக்களின் ஒத்துழைப்புடன் காணிகளை விடுவிப்பதற்குத் தேவையான காணி அளவீடுகளை மேற்கொள்வதற்கும் இன்னும் நலன்புரி முகாம்களில் தங்கியிருப்பவர்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுத்து மீள்குடியேற்றுவதற்கும் இந்த கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், முப்படைகளின் தளபதிகள் உட்பட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கஜேந்திரகுமார் எம்.பிக்கு வெளிநாட்டு பயணத்தடை

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கு கிளிநொச்சி நீதவான் நீதிமன்றத்தினால் வெளிநாட்டு பயணத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் - மருதங்கேணி பிரதேசத்தில் இடம்பெற்ற கூட்டமொன்றின்போது பொலிஸ் விசாரணைப் பிரிவு உறுப்பினர்களுடன் ஏற்பட்ட சம்பவம் தொடர்பில் நீதிமன்றத்தில் நேற்று (06) விடயங்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

அதனையடுத்து, நீதிமன்றத்தினால் இந்த தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார்.

### ஆரம்ப சேவை பதவிகளில்...

ஆரம்ப சேவைப் பதவிகளிலுள்ள பட்டதாரிகளுக்கு இழைக்கப்பட்ட அநீதி தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பாராளுமன்றத்தில் குரல் எழுப்பினார்.

ஆரம்ப சேவைப் பதவிகளிலுள்ள பட்டதாரிகளுக்கு குறிப்பாக தொழிலாளர், பாதுகாப்பாளர், அலுவலக உதவியாளர், சுகாதார உதவியாளர் போன்ற நிலைகளில் உள்ளோருக்கு ஏற்பட்டுள்ள பாரிய அநீதி தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் பாராளுமன்றத்தின் கவனத்துக்கு கொண்டுவந்தார்.

இவ்வருடத்தில் 8000 பட்டதாரிகள் ஆசிரியர் பணிக்கு சேர்த்துக் கொள்ளப்படவுள்ளதாக பத்திரிகைகளில் செய்திகள் பிரசுரமாகி இருந்தாலும், இதற்காக அரச பணியில் ஆரம்ப பணி நிலைகளில் பணிபுரிபவர்கள் வாய்ப்பை இழப்பதாகவும் 2019 - 2020 இல் பயிலுநர் பட்டதாரிகளாக சேர்த்துக் கொள்ளப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கே இந்த நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆரம்ப சேவை பதவிகளில் ஈடுபடுபவர்களுக்கு வெளிவாரிப் பட்டங்களும் உள்வாரிப் பட்டங்களும் இருந்தாலும் அவர்கள் பணிபுரியும் தரத்தின் அடிப்படையில் பதவி உயர்வு பெற முடியாது எனவும், இது பாரதூரமான மனிதாபிமானப் பிரச்சினை என்பதால் இது தொடர்பில் கவனம் செலுத்துமாறும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ஒரே வருடத்தில், ஒரே பல்கலைக்கழகத்தில், ஒரே கற்கைகள் பீடத்தில் ஒன்றாக கற்று பட்டம் பெற்றவர்கள் கூட இவ்வாறு உயர் பதவிகளிலும் கீழ்நிலைப் பதவிகளிலும் இருப்பது பாரதூரமான மனிதாபிமானப் பிரச்சினையாகும் எனவும் அவர் குறிப்பிட்டார். இதற்கு மேலதிகமாக தற்போதைய ஆசிரியர் பற்றாக்குறையைத் தீர்க்க இந்த ஆரம்ப சேவை பதவிகளில் உள்ள பட்டதாரிகளையும் பயன்படுத்தினால் மிகவும் பொருத்தமானது எனவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

### இரகசியம்...

தொடர்பில் இரகசியம் பேணுவதற்கு எதுவும் இல்லை. இந்தச் சட்டமூலம் தொடர்பில் அமைச்சரவை உபகுழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. எனவே தீர்க்கமான கலந்துரையாடல்களின் பின்னர் இந்த சட்டமூலம் தொடர்பான தீர்மானங்கள் எடுக்கப்படுமென்று அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று(06) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிருக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பின்போதே இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

ஒளிபரப்பு அதிகார சபை சட்டமூலம் தொடர்பில் இரகசியம் பேணுவதற்கு எதுவும் இல்லை. இந்த சட்டமூலம் தொடர்பில் அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவின் தலைமையில் அமைச்சரவை உபகுழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அந்த குழுவில் நாங்களும் அங்கத்தவர்களாக இருக்கின்றோம். அதற்கமைய, ஒளிபரப்பு பிரிவினருடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான வாய்ப்பும் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது. பல்வேறு நிபுணர்களின் ஆலோசனைகளுக்கமையவே இந்தச் சட்டமூலத்தை தயாரித்துள்ளோம்.

ஊடக சுதந்திரத்தை பாதுகாக்கும், ஊடகவியலாளர்களை பாதுகாக்கும் மிகவும் சிறந்த தன்மை இங்கிலாந்திலேயே இருக்கிறது என்பது பொதுவான கருத்தேற்பாகும். அந்தச் சட்டமூலத்தில் ஏற்றுக்கொள்ள முடியாத விடயங்கள் இருக்குமாக இருந்தால், இங்கிலாந்திலுள்ளது போன்றவொரு ஊடகச் சுதந்திரத்தை நாட்டில் உருவாக்க ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இங்கிலாந்திலுள்ளது போன்று பரந்துபட்ட ஊடக கட்டமைப்பை அநேகமானவர்கள் விரும்புவார்கள் என்றே நாங்கள் நம்புகிறோம்.

எமது வரலாற்றில் இங்கிலாந்தின் சட்டப் பண்புகள் எமது நாட்டில் இருந்தே வருகின்றன. அதனை அடிப்படையாக கொண்டு முன்னெடுக்கப்பட்டு வந்த தொடர்ச்சியான கலந்துரையாடல்களின் பின்னரே இந்த சட்டமூலத்தை தயாரிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். வெகுசன ஊடக அமைச்சர் என்ற வகையில் இந்தச் சட்டமூலத்தை வரவேற்கிறேன். கட்டுப்பாடுகளின்றி எந்தவொரு துறையும் இயங்கலாம் என்று எவரும் கூற மாட்டார்கள் என்று கருதுகிறோம்.

இந்த சட்டமூலம் தொடர்பில் பல்வேறு கலந்துரையாடல்கள் இடம்பெற்றுவருகின்றன. அதன் அடிப்படையில் இறுதி தீர்மானத்துக்கு வரமுடியும் என்றார்.

### ஊழல் எதிர்ப்பு...

'ஊழல் எதிர்ப்பு' எனும் சட்டமூலம் அரசியலமைப்புக்கு உட்பட்டதா என்பது தொடர்பில் உயர் நீதிமன்றத்தின் தீர்மானம் கீழ்வருமாறு அமைந்துள்ளது.

சட்டமூலத்தின் 1, 2(1)(f), 2(2), 3(2), 4(1)(a), 4(1)(b), 4(3), 17(1), 21, 31(2), 163(2)(h), 40, 48(3), 49(1)(f), 50(1)(a), 53(1), 62(1), 65, 67(5), 71(6) மற்றும் (8), 80, 93, 99, 101, 112, 149 மற்றும் 162 ஆகிய வாசகங்கள் அரசியலமைப்புக்கு ஒத்திசைவாகாது.

எவ்வாறாயினும், உயர்நீதிமன்றத்தின் தீர்மானத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள திருத்தங்கள் சட்டமூலத்தில் மேற்கொள்ளப்படுமாயின் இந்த ஒத்திசைவாகாத தன்மை இல்லாமல்போய்விடும்.

இந்தத் திருத்தங்களுக்கு மேலதிகமாக, உயர்நீதிமன்றத்தினால் குறிப்பிடப் பட்டிருப்பதாவது, சட்டமூலத்தின் 8(3), 136, 141, 142 மற்றும் 156 வாசகங்கள் தொடர்பில் மேலதிக சொலிசிட்டர் ஜெனரலினால் குறிப்பிடப்பட்ட திருத்தங்கள் மூலம் மனுதாரர்களினால் முன்னிலைப்படுத்தப்பட்ட விடயங்களுக்குத் தீர்வுகாண முடியும் என்றும் சபாநாயகர் தனது அறிவிப்பில் சுட்டிக்காட்டினார்.

அதேநேரம், அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் 'மாகாண சபைத் தேர்தல்கள் (திருத்தம்)' எனும் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்துக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட மனு மீதான உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு கிடைத்திருப்பதாகவும் சபாநாயகர் சபையில் அறிவித்தார்.

சட்டமூலத்தின் 3ஆம் வாசகத்தினை திருத்துவதற்கும் மற்றும் 4ஆம் வாசகத்தினை நீக்குவதற்குமான உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு உட்பட்டு சட்டமூலமோ அல்லது அதன் எந்த ஏற்பாடுகளுமோ அரசியலமைப்புக்கு ஒவ்வாதனவாகவிராது என உயர் நீதிமன்றம் தீர்மானித்திருப்பதாகவும் சபாநாயகர் இதன்போது குறிப்பிட்டார்.

### கம்பளையில்...

மஹகனதராவ, ஹக்மன, பல்லேகெலே, புத்தங்கல ஆகிய பிரதேசங்களில் இந்த நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கத்தில் மத்திய பகுதியாக புபுரெஸ்ஸ பிரதேசம் அடையாளங் காணப்பட்டுள்ளது.

### கப்பல் விபத்துகளை...

அமரசேன, டொக்டர் கவிந்த ஹேஷான் ஜயவர்தன, அகில எல்லாவல, நாலக பண்டார கோட்டேகொட, சட்டத்தரணி மதுர விதானகே ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கு மேலதிகமாக பாராளுமன்ற நிலையியற் கட்டளை 111இன் ஏற்பாடுகள் மற்றும் 2022 நவம்பர் 21ஆம் திகதி பாராளுமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணை என்பவற்றுக்கமைவாக நியமிக்கப்பட்ட அந்தந்த துறைசார் மேற்பார்வைக் குழுக்களில் பணியாற்றுவதற்காக பின்வரும் பாராளுமன்ற உறுப்பினர்களும் தெரிவுக் குழுவினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டுள்ளனர்.

அந்தவகையில் மத விவகாரங்கள் மற்றும் சகவாழ்வு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு கோகிலா குணவர்தனவும் நல்லிணக்கம் மற்றும் தேசிய ஒற்றுமை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு மர்ஜான் பளீலும் தேசிய பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவும் சர்வதேச தொடர்புகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு சட்டத்தரணி மதுர விதானகேவும் பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தைத் தணித்தல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு கலாநிதி சரத் வீரசேகரவும் வலுச்சக்தி மற்றும் போக்குவரத்து பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஏ.எல்.எம். அதாஉல்லாவும் உணவுப் பாதுகாப்பு மற்றும் கமத்தொழில் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு சீ.பீ.ரத்நாயக்கவும் சுற்றாடல், இயற்கை வளங்கள் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஜயந்த கெட்டகொடவும் வெளிநாட்டுத் தொழில்கள் மற்றும் உழைப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு காமினி லொக்குகேவும் சுகாதாரம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு திருமதி முதிதா பிரிசாந்தியும் சிறுவர்கள், பெண்கள் மற்றும் பாலினம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஸாரப்பும் ஊடகம், இளைஞர், மரபுரிமை மற்றும் புதிய பிரஜைகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு திஸ்ஸகுட்டி ஆரச்சியும் வெளிப்படையான மற்றும் பொறுப்புக்கூற வேண்டிய அரசாங்கமொன்று பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஜனாதிபதி சட்டத்தரணி ஜயந்த வீரசிங்கவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பாராளுமன்ற நிலையியற் கட்டளை 115 இன் ஏற்பாடுகள் மற்றும் 2023 பெப்ரவரி 10ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணை என்பவற்றுக்கு அமைவாக, பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் பணியாற்றுவதற்காக ஏ.எல்.எம். அதாஉல்லாவும் தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன், வங்கித்தொழில் மற்றும் நிதிச் சேவைகள் பற்றிய குழுவில் பணியாற்றுவதற்காக மிலான் ஜயதிலக்கவும் தெரிவுக் குழுவினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டுள்ளனர் என சபாநாயகர் சபையில் அறிவித்தார்.

### டயனாவின் எம்.பி...

என மேன்முறையீட்டு நீதிமன்ற தலைவர் நீதிபதி நிஸங்க பந்துல கருணாரத்ன மற்றும் ஏ.மரிக்கார் ஆகிய நீதிபதிகள் குழாமினால் அறிவிக்கப்பட்டு அன்றைய தினம் வரை வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சமூக செயற்பாட்டாளரான ஓசத ஹேரத்தினால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இராஜாங்க அமைச்சர் டயானா கமகே பிரித்தானிய குடியுரிமையை கொண்டுள்ளதால் அவருக்கு இந்நாட்டின் பாராளுமன்றத்தில் அமர்வதற்கு தகுதி இல்லை என்ற தீர்ப்பினை வழங்குமாறு கோரி அவரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### இணையவழிக் குற்றங்கள்...

கணினி குற்றச்சாட்டுகள் தொடர்பில் பல்வேறு வகையான முறைப்பாடுகள் பதிவாகின்றன.

விசேடமாக பேஸ்புக், இன்ஸ்டகிராம் மற்றும் டிக்டொக் உள்ளிட்ட சமூக வலைத்தளங்கள் மூலமாகவே அதிக எண்ணிக்கையிலான முறைப்பாடுகள் பதிவாகின்றன.

அதன்படி, இவ்வருடம் ஜனவரியில் ஆயிரத்து 200 முறைப்பாடுகளும் பெப்ரவரியில் ஆயிரத்து 100 முறைப்பாடுகளும் மார்ச், ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் விசேடமாக புத்தாண்டு விடுமுறையுடன் மாதத்துக்குள் சுமார் இரண்டாயிரம் முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளன.

தொலைபேசி அழைப்பினூடாக நாளொன்றுக்கு சுமார் 120 முறைப்பாடுகளும் எமது மின்னஞ்சல் முகவரியூடாக நாளொன்றுக்கு 60 முதல் 75 வரையான முறைப்பாடுகளும் கிடைக்கப் பெறுகின்றன.

மேலும் நிர்வாணப் புகைப்படங்கள், வீடியோக்கள் மற்றும் பாலியல் உறவு தொடர்பில் பதிவேற்றுவதற்கான வேறு இணையத்தளங்கள் இருக்கின்றன.

அவ்வாறான இணையத்தளங்களில் பதிவேற்றப்படும் உண்மைக்கு புறம்பான வீடியோ மற்றும் புகைப்படங்கள் தொடர்பில் குறித்த அந்த இணைய முகவரியுடன் எமது நிறுவனத்துக்கு முறைப்பாடளிக்க முடியும்.

அவ்வாறு அனுப்பி வைக்கப்படும் வீடியோக்கள் மற்றும் புகைப்படங்கள் முறைப்பாடளிக்கப்பட்ட 24 மணிநேரத்துக்குள் இல்லாது செய்யப்படும்.

பேஸ்புக், வட்ஸ்அப், ட்விட்டர் இன்ஸ்டகிராம் உள்ளிட்ட சமூக வலைத்தள பாவனையின்போது தெரியாத ஒருவருடன் உங்களின் தனிப்பட்ட தகவல்களை பகிர்ந்துகொள்வதை தவிர்த்துக் கொள்ளுங்கள்.

மேலும், கணினி வழி குற்றங்கள் குறித்து 101 என்ற எங்களின் அவசர அழைப்புக்கும் report@cert.gov.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் அனுப்பி வைக்க முடியும் - என அவர் தெரிவித்துள்ளார்.

# மலையகம் தொடர்பான உலகத் தூதுவர்களின் அக்கறை எமது முயற்சிகளுக்கு கிடைத்த வெற்றி

## மனோ கணேசன் எம்.பி.



மலையகம் தொடர்பான வெளிநாட்டு தூதுவர்களின் அக்கறையானது எமது முயற்சிகளுக்குக் கிடைத்த பாரிய வெற்றியாகும் என பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,அமெரிக்கா, பிரித்தானியா, கனடா, ஜப்பான், பிரான்ஸ் மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளின் தூதுவர்களுடனும் அந்தந்த நாடுகளிலிருந்து இலங்கைக்கு வந்து போகும் ஐ.நா., உலக வங்கி உட்பட பன்னாட்டு நிறுவன மற்றும் அரச பிரதிநிதிகளுடனும் தமிழ் முற்போக்குக் கூட்டணி தொடர்ச்சியாக நடத்தி வரும் கலந்துரையாடல்கள் மற்றும் அவர்களுக்கு எம்மால் வழங்கப்பட்டுள்ள எழுத்து மூலமான ஆவணங்கள் காரணமாக இலங்கை - இந்திய வம்சாவளி மலையகத் தமிழர் தொடர்பான போதிய தெளிவு தற்போது சர்வதேச சமூகத்துக்கு ஏற்பட்டு வருகின்றது. இன்னமும் பலநாட்டுத் தூதுவர்களுடனும் பன்னாட்டு நிறுவனங்களுடனும் நாம் எதிர்வரும் வாரங்களில் பேசவுள்ளோம்.

மத்திய, மேல், சப்ரகமுவ, ஊவா, தென் மாகாணங்களில் வாழும் சுமார் 15 இலட்சம் மலையகத் தமிழரின் தேசிய அரசியல் அபிலாஷைகள் மற்றும் வாழ்வாதார நிலைமைகள் தொடர்பான எமது தொடர்ச்சியான வலியுறுத்தல்கள் இன்று பயனளிக்க ஆரம்பித்துள்ளன. இது மகிழ்ச்சியைத் தரும் ஒரு வளர்ச்சி மைல்கல்லாகும்.

நம்மை ஆளும், ஆண்ட அரசாங்கங்கள் எம்மை மாற்றாந்தாய் பிள்ளைகளாக நடத்தும் போது, நாம் அயலவரை நாடி எமது நியாயமான எதிர்பார்ப்புகளை நிறைவேற்றிக்கொள்ள முயல்வது மிகவும் இயல்பானதாகும். இதில் தவறில்லை. இருந்தால், அரசாங்கத்திடமே தவறு இருக்கிறது. இதுபற்றிய தெளிவு என்னிடம் நிறையவே இருக்கிறது. ஆகவே, இனவாதிகள் யாரும் அலட்டிக்கொள்ள வேண்டியதில்லை.

எந்தவொரு முயற்சியும் ஒரே இரவில் பலன் தரப்போவதில்லை. படிப்படியான இடைவிடாத முயற்சிகளின் பின்னரே பலன் கிடைக்கும் என்பது எமக்கு நன்கு தெரியும். எம்மை நோக்கிய இந்த சர்வதேச கவனத்தை எமது மக்களுக்கான ஆக்கபூர்வ நடவடிக்கைகளாக மாற்ற நாம் நன்கு திட்டமிட்டுள்ளோம். அதன் விபரங்களை அடுத்து வரும் நாட்களில் நாடு அறிந்து கொள்ளும் எனக் கூட்டணித் தலைவர் என்ற முறையில் இப்போதே கூறி வைக்கிறேன்.

நாம் சர்வதேச அரசுமுறை பிரதிநிதிகள், தூதுவர்கள் ஆகியோருடனும் மற்றும் யூஎஸ் எய்ட், உலக வங்கி உட்பட்ட இலங்கையின் அபிவிருத்தி பங்காளி நிறுவனங்களுடனும் பேசுகிறோம். "இலங்கைக்கு நீங்கள் தரும் நன்கொடைகள், உதவிகள், கடன்கள் இலங்கையில் மிகவும் பின்தங்கிய எமது மக்கள் பிரிவினருக்கும் கிடைப்பதை உறுதி செய்யுங்கள்" என நாம் வலிந்து வலியுறுத்துகிறோம்.

இன்று அரசு முன்னெடுக்கவுள்ள "அஸ்வெசும-ஆறுதல்" என்ற நாளாந்த பிரிவினருக்கான கொடுப்பனவுகள் தொடர்பிலும் நாம் எடுத்த முன்நகர் நடவடிக்கை இன்று உலக வங்கியினதும் அரசாங்கத்தினதும் சர்வதேச சமூகத்தினதும் கவனத்தைப் பெற்றுள்ளது என்றும் தெரிவித்தார்.

# அமெரிக்காவின் ஆசியாவுக்கான பிரதி உதவி திறைசேரி செயலாளர் சஜித்துடன் சந்திப்பு





அமெரிக்காவின் ஆசியாவுக்கான பிரதி உதவி திறைசேரி செயலாளர் ரொபர்ட் கப்ரோத் உள்ளிட்ட குழுவினர் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

இச்சந்திப்பு நேற்று முன்தினம் (05) கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் இடம்பெற்றது.

நாட்டில் நிலவும் நிதி நெருக்கடி தொடர்பாக எடுக்கப்படக்கூடிய நிலையான தீர்வுகள் மற்றும் இலங்கையின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான திட்டங்கள் குறித்தும் இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இலங்கையை கட்டியெழுப்புவதற்குத் தேவையான சர்வதேச ஆதரவைக் கோரிய எதிர்க்கட்சித் தலைவர், நாட்டில் வீழ்ச்சியடைந்துள்ள பல்வேறு துறைகளைக் கட்டியெழுப்புவது தொடர்பில் கவனம் செலுத்துமாறும் கேட்டுக் கொண்டார்.

# தேசிய ஆணைக்குழு நியமனம்

பாலின சமத்துவம், பெண்களை வலுவூட்டல் மற்றும் பெண்களுக்கான தேசிய ஆணைக் குழுவொன்றை அமைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

பாலின சமத்துவம், பெண்களை வலுவூட்டல் மற்றும் பெண்களுக்கான தேசிய ஆணைக் குழுவொன்றை அமைப்பது தொடர்பான சட்ட மூலத்தின் முன்னேற்றம் குறித்து சம்பந்தப்பட்ட பங்குதாரருடன் இணைந்து பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியத்தில் மீளாய்வு செய்யப்பட்டது.

ஒன்றியத்தின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே தலைமையில் பாராளுமன்றத்தில் முதலாம் திகதி இடம்பெற்றது. இதன்போது ஐக்கிய நாடுகள் சபையின் மக்கள் தொகை நிதியம் (UNFPA) பிரதிநிதியால் சட்ட மூலம் தொடர்பில் முன்வைப்பு மேற்கொள்ளப்பட்டது.

இந்தச் சட்ட மூலங்கள் தொடர்பில் மீளாய்வு செய்வதற்கு நிபுணர்கள் குழுவொன்றை அமைக்குமாறு ஒன்றியத்தின் தலைவர் சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே கோரிக்கை விடுத்தார்.

அதற்கமைய, மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சின் செயலாளரின் தலைமையில் நிபுணர்கள் குழுவொன்று நியமிக்கப்பட்டது. பேராசிரியர் வசந்தா செனவிரத்ன, கலாநிதி றோஸ் விஜேசேகர, கலாநிதி ரமணி ஜயசுந்தர, கலாநிதி விஜய ஜயதிலக்க, விசேட வைத்திய நிபுணர் லக்ஷ்மன் சேனாநாயக்க மற்றும் உதேனி தெவரப்பெரும ஆகியோர் இந்தக் குழுவில் அடங்குகின்றனர்.

இந்தக் கூட்டத்தில் பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர, மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சின் அதிகாரிகள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் மக்கள் தொகை நிதியத்தின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

# மாணவர்களுக்காக மின்னஞ்சல் கணக்குகளில் பெற்றோரின் தகவல்களை உள்ளீர்க்க வேண்டாம்

## பொலிஸ் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் பாராளுமன்றக் குழுவில் தெரிவிப்பு





பாடசாலை மாணவர்களுக்காக மின்னஞ்சல் (E-mail) கணக்குகளை உருவாக்கும்போது பெற்றோரின் தகவல்களை உள்ளீடு செய்யாது மாணவர்களின் சரியான வயது உள்ளிட்ட தகவல்களை வழங்குமாறு பொலிஸ் குற்றப்புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் நல்லிணக்கம் மற்றும் தேசிய ஒற்றுமை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவில் தெரிவித்தனர்.

கடந்த காலங்களில் இணையவழிக் கல்வி பிரபலமடைந்தமையால் பிள்ளைகளின் பயன்பாட்டுக்காக கையடக்கத்தொலைபேசிகள் உள்ளிட்ட கணினி சாதனங்களை அவர்களுக்கு வழங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருப்பதாக அதிகாரிகள் சுட்டிக்காட்டினர். எவ்வாறாயினும், ஸ்மார்ட் போன்களை வழங்கும்போதும், மின்னஞ்சலைத் தொடங்கும்போதும் பெற்றோரின் தரவை வழங்குவதன் மூலம், குழந்தைகள் எந்தவொரு இணையதளத்தையும் அணுகுவதற்கான வாய்ப்பைப் பெறுவார்கள் என்று அவர்கள் சுட்டிக்காட்டினர். அப்படியல்லாமல், குழந்தைகளின் சரியான வயது உள்ளிட்ட தகவல்களை வழங்கினால் தேவையற்ற வீடியோக்கள் மற்றும் இணையதளங்களைப் பார்ப்பதற்கு பிள்ளைகளுக்கான அணுகல் தானாகவே கட்டுப்படுத்தப்படும் என்றும் தெரிவித்தனர்.

தேசிய நல்லிணக்கம் மற்றும் சிறுவர் மற்றும் பெண்கள் பணியகத்தின் செயலாற்றுகை தொடர்பில் ஆராய்வதற்காக நல்லிணக்கம் மற்றும் தேசிய ஒற்றுமை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தலைமையில் அண்மையில் கூடியபோதே பொலிஸ் அதிகாரிகள் இதனைத் தெரிவித்தனர்.

தொலைபேசியைப் பயன்படுத்தும்போது இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் (TRCSL) குறித்த கையடக்கத்தொலைபேசி அங்கீகரிக்கப்பட்டுள்ளதா என்பதைச் சரிபார்க்க வேண்டியது அவசியம். அதாவது, எந்தவொரு குற்றச்செயலுக்கும் கையடக்கத்தொலைபேசிகள் பயன்படுத்தப்பட்டால் அதை விரைவாக சமாளிக்கும் திறன் இந்த கையடக்கத் தொலைபேசிகளுக்கு உள்ளது. அதாவது, தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவில் (TRCSL) பதிவுசெய்யப்பட்ட கையடக்கத் தொலைபேசிகளில் சிம் அட்டைகளை இடும்போது, அது தொடர்பான தகவல்களை ஆணைக்குழு பெறுகிறது. எனவே, கையடக்கத் தொலைபேசிகளைக் கொள்வனவு செய்யும்போது அவை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவில் பதிவுசெய்யப்பட்டவையா என்பதை உறுதிசெய்துகொள்ளுமாறும் பொலிஸ் அதிகாரிகள் குழு முன்னிலையில் தெரிவித்தனர்.

அத்துடன், தேசிய நல்லிணக்கம் மற்றும் சிறுவர் மற்றும் பெண்கள் பணியகம் தொடர்பில் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட வேலைத் திட்டம் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான இசுரு தொடங்கொட, மாயாதுன்ன சிந்தக அமல், ராஜிகா விக்கிரமசிங்ஹ மற்றும் கெவிந்து குமாரதுங்க ஆகியோர் கலந்துகொண்டனர்.

# விஹாராதிபதியிடம் கப்பம் கோரல்

## விசாரணைகளை ஆரம்பித்துள்ள அநுராதபுரம் தலைமையகப் பொலிஸார்

**(அநுராதபுரம் செய்தியாளர்)**

மிஹிந்தலை ரஜமஹா விஹாரையின் விஹாராதிபதி வலவா ஹெங்குனவெவ தம்மரத்ன தேரரிடம் ஒரு கோடி ரூபா கப்பம் கோரி தேரரை அச்சுறுத்திய சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரைக் கைதுசெய்வதற்காக அநுராதபுரம் தலைமையகப் பொலிஸ் நிலைய இரு பொலிஸ் குழுக்கள் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளன.

விஹாராதிபதிக்கு கடந்த முதலாம் திகதியன்று வட்சப் மூலம் அழைப்பொன்றை ஏற்படுத்தி தங்களுடைய வீடியோ காணொளி மற்றும் உங்களுடைய உரை அடங்கிய தகவல்களை முக நூலில் பதிவு செய்வதைத் தவிர்ப்பதற்காக ஒரு கோடி ரூபா பணம் வேண்டுமென அச்சுறுத்தியதாக அநுராதபுரம் தலைமையகப் பொலிஸ் நிலையத்தில் மிஹிந்தலை விஹாராதிபதி செய்த முறைப்பாட்டையடுத்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, அநுராதபுரம் நகரில் ஹோட்டல் ஒன்றை நடத்திச் செல்லும் ஹோட்டல் உரிமையாளர் மற்றும் பெண்ணொருவர் தொடர்பிலும் அநுராதபுரம் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# தினசரி பலாபலன்கள்

**சோபகிருது வருடம் வைகாசி மாதம் 24ஆம் நாள் புதன்கிழமை**

**மேஷம்** – தொழில், வியாபார இலாபம், எதிர்பார்த்திருந்த வெளிநாட்டுப் பயணம் அமையும்.

**ரிஷபம்** – தடைப்பட்டாலும் கேட்ட உதவிகள் கிடைக்கும். தொழில் முயற்சிகளில் வெற்றி கிட்டும்.

**மிதுனம்** – வீண் மனப்பயத்தினால் உடல் நோய்கள் ஏற்படும். மறைமுக விரோதிகளின் தொல்லை.

**கடகம்** – தொழில் விடயத்தில் கவனமாக இருக்காவிட்டால் வீண் பழி வரலாம். உடல் நோய்கள் கவனம்.

**சிம்மம்** – நண்பரின் விருந்துபசாரத்தில் கலந்து கொள்வீர்கள். மனைவியால் அதிக நன்மைகளைப் பெறுவீர்கள்.

**கன்னி** – புது நண்பர்கள் அறிமுகமாவார்கள். பகைவர்கள் விலகிச் செல்வார்கள்.

**துலாம்** – பயணங்களில் இடையூறு ஏற்படும். உடல் நோய்களை அசட்டை செய்யாதீர்கள்.

**விருச்சிகம்** – யாரையும் நம்பமுடியாமல் தவிப்பீர்கள். எதிர்கால வாழ்விற்கு திட்டமொன்றைத் தீட்டுவீர்கள்.

**தனுசு** – இன்ப அனுபவங்களால் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். முயற்சிகளில் வெற்றி கிட்டும்.

**மகரம்** – பணம், பொருள் விரயமாவதை எண்ணிக் கவலை அடைவீர்கள். நினைத்த காரியங்கள் சற்றுத் தாமதமாகி நடக்கும்.

**கும்பம்** – மனதில் ஒருவித படபடப்புத் தன்மை இருக்கும். வீண் வம்புச் சண்டையை விலை கொடுத்து வாங்காதீர்கள்.

**மீனம்** – வீண் பணவிரயமும் மருத்துவச் செலவுகளும் ஏற்படும். கோபத்தை குறைத்துக் கொள்வது நல்லது.

| | |
|---|---|
| திதி | :சதுர்த்தி பி.ப.9.51 வரை பின் பஞ்சமி (தேய்) |
| நட்சத்திரம் | :உத்திராடம் பி.ப.9.02 வரை பின் திருவோணம் |
| யோகம் | :அமிர்த சித்த யோகம் |
| வார சூலை | :வடக்கு திசை நோக்கி சுபகாரியம் கூடாது |
| நல்லநேரம் | :மு.ப. 8.50– 9.50 மணி வரை |
| ராகுகாலம் | :11.50– 1.20 மணி வரை |
| எமகண்டம் | :7.20 – 8.50 மணி வரை |
| குளிகை | :10.20 – 11.50 மணி வரை |
| சந்திராஷ்டமம் | :மிதுன ராசியினர் எச்சரிக்கையாக செயற்படவும் |
| தனஅதிஷ்டம் | :பரணி,பூரம்,பூராடம் (பிறந்தவர்களுக்கு) |
| விஷேட தினம் | : சங்கடஹர சதுர்த்தி விரதம் |

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739





அமெரிக்காவிலிருந்து வருகைதந்த சிறுநீரக மாற்று சத்திரசிகிச்சை நிபுணரும் பேராசிரியருமான தவம் தம்பிப்பிள்ளை யாழ்ப்பாண வருகையின் ஓரங்கமாக தனது தாயார் கல்வி கற்ற கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கு விஜயம் செய்தார். இதன்போது உள்ளக கரப்பந்தாட்டப் போட்டியில் வெற்றிபெற்ற ஆசிரிய மாணவர்களுக்கான சான்றிதழ்களை வழங்கி கௌரவித்தார்.









அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா சபையின் உப தலைவர் அஷ்ஷெய்க் எச். உமர்தீன் எழுதிய நபி வழியில் ஹஜ், உம்ரா அனுபவக் குறிப்புகளுடன் எனும் நூல் வெளியீட்டு விழா அக்குறணை அஸ்னா ஜும்ஆப் பள்ளிவாசலில் இடம்பெற்றது. அக்குறணை ஜம்மிய்யதுல் உலமா சபையின் ஏற்பாட்டில் அதன் தலைவர் மௌலவி சியாம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நூல் பற்றிய கருத்துரையை ஹக்கீமிய்யா அரபுக் கல்லூரி அதிபர் அஷ்ஷெய்க் ஹிதாயத்துல்லாஹ் ரஸீனும் நூல் ஏற்புரையை அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா சபையின் உப தலைவர் மௌலவி எச். உமர்தீனும் நிகழ்த்தினர். இந்நிகழ்வில் தொழிலதிபர் நிஸைர், உலமாக்கள், சிவில் சமூக அமைப்பின் பிரதிநிதிகள், வர்த்தகப் பிரமுகர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (இக்பால் அலி)

தமிழன் THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

**2023, ஜூன் 07ஆம் திகதி, புதன்கிழமை**

# தோற்கடிக்கப்படவேண்டிய அரசாங்கத்தின் முயற்சி

அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்படவுள்ள உத்தேச ஒளி/ ஒலிபரப்பு அதிகாரசபை சட்டமூலம், சட்டமாக அமுலானால் அதுவே ஊடக சுதந்திரத்தின் இறுதிப் பயணம் என்றும், இது ஜனநாயகத்துக்கு ஏற்பட்டுள்ள பாரிய சவாலாகுமென்றும் எதிர்க்கட்சிகள் தெரிவித்துள்ளன.

“பலமான ஊடக நிறுவனம் என்பது நவீன ஜனநாயகத்தின் மிகவும் முக்கியமான பண்பாக காணப்படுகின்றது. ஜனநாயகத்தின் நான்காவது தூணாகவே ஊடக சுதந்திரம் கருதப்படுகிறது. அரசியலமைப்பின் 14ஆவது உறுப்புரையில் கருத்துரிமை பற்றிக் கூறப்பட்டுள்ளது. அதில் கருத்து வெளிப்படுத்தும் சுதந்திரம் தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது. ஏனைய சகல மனித உரிமைகளையும் அனுபவிப்பதற்கான முக்கிய நிபந்தனையாக சுயாதீன ஊடகங்கள் கருதப்படுகின்றன. ஆகவே, ஊடக சுதந்திரம் இல்லாமல் ஏனைய உரிமைகளை அனுபவிக்க முடியாது.

அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்படவுள்ள உத்தேச சட்டமூலத்தை, சட்டபூர்வமாக்கினால், அதுவே ஊடக சுதந்திரத்தின் இறுதிப் பயணமாக அமையும் என்பது உறுதியான விடயமாகும்.

இது சட்டமல்ல, யோசனை மாத்திரமென்பதே அரசாங்கத் தரப்பின் தர்க்கமாக இருக்கிறது. அரசாங்கத்தின் இந்த நிலைப்பாட்டை முழுமையாக மறுக்கிறோம். அது தவறான கருத்தாகும்.

இந்த உத்தேச சட்டமூலம் அமுலானால், ஊடக நிறுவனங்களின் தன்மை முழுமையாக மாற்றத்தை சந்திக்கும்.

இது சட்டமாக அமுலாகும் நாளிலிருந்து ஊடகங்களின் நிலைமை முழுமையாக மாற்றத்தை சந்திக்கும் என்பதுடன், சமூக ஊடகங்களில் இது நேரடி தாக்கத்தை ஏற்படுத்துமென்று பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள இந்த சட்டமூலம், சட்டமாக அமுல்படுத்தப்பட்டதிலிருந்து ஆறு மாதங்களில், தற்போது ஊடகங்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் சகல அனுமதிப் பத்திரங்களும் முழுமையாக இரத்தாகும்'' என்று தகவல் கசிந்துள்ளது. அதன்பின்னர், அதுவரையில் அந்த ஊடக நிறுவனங்கள் முன்னெடுத்துவந்த செயற்பாடுகளை தொடர்ந்து முன்னெடுக்க முடியாது.

மீறி செயற்பாடுகளைத் தொடர்ந்தால் அது சட்டவிரோதமான செயற்பாடாகும். சட்டம் அமுலாகி ஆறு மாதங்களில் தற்போதுள்ள சகல ஊடகங்களையும் மூடவேண்டிய நிலை ஏற்படும். ஊடகங்கள் சகலதும் மௌனித்துவிடும் என்பது எதிர்க்கட்சிகளின் நிலைப்பாடு.

அவ்வாறு தொடர்ந்து செயற்படவேண்டுமானால், சட்டம் அமுலான தினத்திலிருந்து மூன்று மாதங்களில் ஊடக நிறுவனங்கள் பதிவு செய்யப்படவேண்டும். மூன்று மாதங்களில் புதிய அனுமதிப் பத்திரத்தை பெற்றுக்கொள்ள வேண்டும்.

தற்போதிருக்கும் அனுமதிப் பத்திரத்தை பயன்படுத்த முடியாது. அவ்வாறானால், பல தசாப்தங்களாக இந்த ஊடக நிறுவனங்களின் செயற்பாடுகளை தொடர்ந்து முன்னெடுப்பதானால் மீண்டும் முதலிலிருந்து ஆரம்பிக்கவேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் அந்த நிறுவனங்களை உடனடியாக மூடவேண்டி ஏற்படும். இது ஊடகங்களுக்கான பாரிய சவாலாகும்.

அவ்வாறு அந்த அனுமதிப் பத்திரம் கிடைத்தாலும், அது ஒரு வருட காலத்துக்கே செல்லுபடியாகும். அனுமதி கிடைத்து ஒரு வருடம் நிறைவடைவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னரே, இன்னுமொரு அனுமதிப் பத்திரத்தை பெற்றுக்கொள்ள வேண்டும்.

இந்த விடயங்கள் தொடர்பிலான சகல விடயங்களையும் இந்த உத்தேச சட்ட மூலத்தினால் உருவாக்கப்படவுள்ள ஆணைக்குழுவே இறுதித் தீர்மானத்தை எடுக்கும். ஆணைக்குழு இணங்கினால் பணிகளைத் தொடரலாம். இல்லாவிட்டால் செயற்பாடுகளை நிறுத்திக்கொள்ள வேண்டும்.

ஆகவே, அரசாங்கத்துக்கு ஏற்றவாறு செயற்படுவதானால் அனுமதிப் பத்திரம் கிடைக்கும். அவ்வாறில்லாமல், அரசாங்கத்தை விமர்சித்து செயற்பட்டால் அத்துடன் அந்த ஊடகங்கள் முழுமையாக மூடப்படும் என்ற நிலைமையே இருக்கிறது.

ஊடகங்கள் மீதான அடக்குமுறையும் ஊடகங்களின் கழுத்தை நெரிப்பதும், ஊடகவியலாளர்களை சுட்டுக் கொல்வதும் கடந்த காலங்களில் தாராளமாக இடம்பெற்றன. இப்போது ஒட்டுமொத்த ஊடகத்துறையையே அடக்கியாள்வதற்கு சட்டரீதியாகவே ஏற்பாடுகளை செய்கிறது அரசாங்கம். இதனை எதிர்க்க எதிர்க்கட்சிகள் ஓரணியில் திரண்டிருப்பது வரவேற்கத்தக்கது.

தற்போதைய ஆட்சியாளர்கள் எதிர்வரும் காலங்களிலும் ஆட்சி செய்ய வேண்டுமாயின் அவர்களுக்கு பிரசார ஊதுகுழல்கள் தேவை. எனவே, என்ன விலை கொடுத்தாவது ஊடகங்களைக் கட்டுப்படுத்துவது ஆட்சியாளர்களின் குறியாக இருக்கிறது.

அந்த அராஜகத்திற்கான முயற்சி தோற்கடிக்கப்பட வேண்டும்.

## நக்கல் நமசிவாயம்



விக்கினேஸ்வரன்
எம்.பி. சாதி
பார்த்து
புழங்கியதா
செய்திகள்
வருகுது...
அவர் அப்படி
இல்லையெண்டாத்
தான் பாருங்கோ
அது செய்தி..!

# குப்பை மேடு, காட்டு யானை பிரச்சினைகளுக்கு எப்போது நிரந்தரத் தீர்வு கிட்டும்?

## பலத்த எதிர்பார்ப்புடன் பாலம்போட்டாறு மக்கள்

**ஹஸ்பர் ஏ.ஹலீம்**

“எங்களது ஊரில் காட்டு யானைகளின் தொல்லை அதிகம். இதற்கான காரணம் குப்பை மேடுதான். குப்பைகளை கொட்டுவதை நிறுத்தக்கோரி பல ஆர்ப்பாட்டங்கள் செய்த போதிலும் எவ்வித நடவடிக்கையும் இல்லை. பஸ் ஏறுவதற்காக காத்திருக்கும் போது இந்த குப்பைகளின் துர்நாற்றம் தாங்க முடியாது. அது மட்டுமன்றி, இங்கு பாதுகாப்பான யானை வேலி இல்லை. இந்த யானை பிரச்சினையால் ஊருக்குள் நிம்மதியாக வாழ முடியாது. மாலை 5 மணிக்கே யானை ஊருக்குள் புகுந்து அட்டகாசங்களை மேற்கொள்வதுடன், எங்களது நெற்செய்கை, விவசாயம், தோட்டச் செய்கைகளை அழித்து விடுகின்றன. கச்சான் போன்ற பயிர்களையும் துவம்சம் செய்துவிட்டு செல்கின்றன. குப்பை கொட்டப்படுவதால் அங்குள்ள விலங்குகள் அதனை சாப்பிட்டுவிட்டு ஊருக்குள் வருவதாலும் பல தொற்றுநோய்களும் ஏற்படுகின்றன. இவ்வாறானவற்றில் இருந்து பாதுகாக்க குப்பை மேட்டை அகற்றி பாதுகாப்பான யானை வேலியை அமைத்துத் தருமாறு கேட்டுக் கொள்கிறோம்'' என பாலம்போட்டாறு பத்தினிபுர கிராமத்தின் மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தின் பொருளாளர் ஜீ.விதுர்சியா (வயது 27) தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.

திருகோணமலை மாவட்டம், தம்பலகாமம்



ஜீ.விதுர்சியா

பிரதேச செயலகப் பிரிவில் உள்ள கிராம சேவகர் பிரிவே பாலம்போட்டாறு. இதில் இக்பால் நகர், பத்தினிபுரம் ஆகிய கிராமங்கள் காணப்படுகின்றன.

இதனை அண்மித்த கண்டி - திருகோணமலை பிரதான வீதியின் சிங்கபுர எனும் பகுதியில் தம்பலகாமம் பிரதேச சபை மூலம் கொட்டப்படும் குப்பைகள் மூலமாக பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. குறிப்பாக துர்நாற்றம் காணப்படுகின்றது. இதனை அண்டியே காட்டு யானை படையெடுப்பு போன்றனவும் பாரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. பிரதான வீதியின் அருகே கொட்டப்படும் குப்பைகளால் இவ்வாறு பல பிரச்சினைகளை மக்கள் எதிர்கொள்வதுடன், அவ்வீதி ஊடாக பயணிக்க முடியாத வகையில் துர்நாற்றம் ஏற்படுவதாகவும் அப்பகுதி கிராம மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த பல வருட காலமாக இங்கு கழிவு குப்பைகள் கொட்டப்பட்டு குப்பை மேடாக மாறியுள்ளது. இங்கு பிரதேச சபை மூலமான குப்பை மட்டுமல்ல, வீதியால் செல்லும் தனியார் வாகனப் பயணிகளும் குப்பைகளை வீதியருகே கொட்டிவிட்டு செல்கின்றனர் இதனால் அதனைத் தேடி யானைகளும் படையெடுப்பதுடன், குறித்த யானைகள் ஊருக்குள் புகுந்து மக்களின் சொத்துகளை நாசமாக்கிவிட்டு செல்கின்றன. விவசாயத்தை நம்பியே வாழும் இம்மக்களின் தோட்டப் பயிர்ச்செய்கைகளை அழித்துவிட்டு செல்வதாகவும் இங்கு வாழும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

“பத்தினிபுர கிராமத்தில் தோட்டச்செய்கையில் அதிகமாக ஈடுபட்டு வருகிறோம். இதனை நம்பியே வாழ்வாதாரத்தை மேற்கொள்கிறோம். ஆனால், யானைத் தொல்லையால் பெரும் நஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளோம். இதனால் நிரந்தர யானை வேலியமைக்க உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். எங்களது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவதாக இருந்தால் அச்சத்துடனேயே அனுப்ப வேண்டியுள்ளது.

சுமார் 4 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள தம்பலகாமம் பகுதிக்கு பிள்ளைகள் வகுப்புகளுக்கு சென்று வரவேண்டும். இதனால் யானை வந்துவிடுமோ என்ற பயம்... வீடு வந்து சேரும் வரை மனது படபடக்கிறது. இது இவ்வாறு இருக்க இப்பகுதியில் ஜெயபுரத்தில் குப்பை மேடுள்ளது. இதனை அண்டியும் பிரதான வீதியை கடந்தும் எங்கள் ஊருக்குள் யானை வருகிறது. அருகாமை கிராமத்தில் உள்ள விலாங்குளம் பகுதியில் யானை வேலி அமைத்துக் கொடுக்கப்பட்டதை போன்று நிரந்தரமான பாதுகாப்பான யானை வேலியமைத்து தாருங்கள்'' என பாலம்போட்டாறு பத்தினிபுரவைச் சேர்ந்த தோட்டச்செய்கையில் ஈடுபடும் பெண்ணான டி.விஜயபாரதி (வயது 48) தனது உளக்குமுறல்களை வெளிப்படுத்தியிருந்தார்.



டி.விஜயபாரதி

பல வருட காலமாக மக்கள் ஆரம்பம் முதல் இந்த கிராமத்தில் நெற்பயிர்ச்செய்கை, தோட்டச் செய்கைகளான கத்தரி, வெண்டி, மரவள்ளி, கச்சான் உட்பட பல மேட்டு நிலப்பயிர்களையும் செய்து தங்களது வாழ்வாதார தொழிலாகவும் இலாபமீட்டி வருகின்றனர். ஆனால், இதனை பாதுகாப்பது அவர்களுக்கு சவாலான விடயமாகவே உள்ளது. தினமும் இந்த யானை தொல்லையால் நிம்மதியாக தூக்கமின்றியும் குடியிருப்பு பகுதிக்குள் யானை வருமோ என்ற அச்சமும் ஏற்படுகிறது. யானை தாக்குதல் மூலமாக கடந்த 2022ஆம் ஆண்டில் தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவில் இரண்டுக்கும் மேற்பட்ட உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளதுடன், 5க்கும் மேற்பட்ட யானைகளும் உயிரிழந்துள்ளன.

காட்டு யானைகளானது குப்பை மேட்டை நோக்கி பகலிலும் இரவிலும் படையெடுக்கின்றன. இங்கு கொட்டப்படும் குப்பைகளில் பொலித்தீன் போன்ற உக்க முடியாத பொருட்களும்






காணப்படுவதுடன், இதனால் சூழல் மாசடைவும் ஏற்படுகின்றது. மேலும், ஒரு வகை துர்நாற்றம் மூலமாக தொற்று நோய்களும் ஏற்படுகின்றது. பிரதான வீதியில் பஸ் தரிப்பிடத்தில் பஸ்ஸுக்காக காத்திருக்க முடியாது வகையில் அவ்வளவு துர்நாற்றம் வீசுகிறது. இவ்வாறான விடயங்கள் தொடர்பில் பலமுறை மக்கள் சுட்டிக்காட்டியும் பயனளிக்கவில்லை. காட்டு யானைத் தொல்லை மாத்திரமல்ல, பாதுகாப்புக்கான யானை வேலியின்மை காரணமாகவும் பயம் ஏற்படுகிறது.

“கடந்த வருடம் பெருந்தொகையான மரவள்ளி நாட்டி அதனை யானைகள் அழித்து விட்டன. இதனால் பாரிய நஷ்டம் ஏற்பட்டுள்ளது. யானைக்கு வெடி வைக்கவா முடியும்..? இல்லையே..! இதனை கட்டுப்படுத்தித் தாருங்கள். மேலும், குப்பை மேட்டினால்தான் இந்த யானை எங்களது ஊரை நோக்கி ஊருக்குள் படையெடுத்து பயிர்களையும் நாசமாக்குகிறது'' என விவசாயியான எஸ்.விஜயகுமார் வயது (52) தெரிவித்தார்.



எஸ்.விஜயகுமார்

மக்கள் தங்களது உயிரை துச்சமென மதித்து பல போராட்டங்களுக்கு மத்தியில் யானை - மனிதன் மோதல் என்ற சவாலுக்குள் முகங்கொடுத்து வாழ்கின்றார்கள். இயற்கை விலங்கினங்களை பாதுகாப்பதும் அரசாங்கத்தின் பொறுப்பாகவுள்ளது.

ஆனாலும் இந்த மனித - யானை மோதல் முடிவுக்கு வருவதென்பது கடினமான ஒன்றாகும்.

இக்காட்டு யானை தொல்லையில் இருந்து பாதுகாப்பு பெற வேண்டும் என்பதே இப்பிரதேச மக்களின் கோரிக்கையாக உள்ளது. இருந்த போதிலும், பாதுகாப்பான யானை வேலியின்மை குறைபாடாக உள்ளதுடன், வனஜீவராசிகள் திணைக்களம் மூலமாக அமைக்கப்பட்ட பெரும்பாலான வேலிகள் சேதமாக்கப்பட்டுள்ள நிலையில், பாதுகாப்பின்றியும் காணப்படுகிறது.

இரவில் குடியிருப்புப் பகுதிகளில் பயிரினங்களை பாதுகாப்பதா, நிம்மதியாக உறங்குவதா என்ற வினா இப்பிரதேச மக்களின் கனவுகளாகவே கலைந்து செல்கின்றது.

“இந்த குப்பை மேடு மூலமாகவே யானை ஊருக்குள் வருவதுடன், குப்பைகளை கொட்டுவோர் வீதியின் அருகே கொட்டிவிட்டு செல்கின்றனர். தம்பலகாமம் முழுவதுமாக சேரும் கழிவுகளை இங்கு கொட்டுவதால் நாய் இனங்களும் பெருக்கமடைந்து காணப்படுகிறன.

இதனால் சில வேளைகளில் இவை இறந்து வீதிகளில் காணப்படுவதுடன், துர்நாற்றமும் வீசுகிறது. எனவே, எங்களுக்கான பாதுகாப்பான யானை வேலி தேவை என்பதுடன், குப்பை மேட்டை அகற்ற வழி செய்யுங்கள் இந்த கிராமத்தில் யானை தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இருவர் காயமடைந்துள்ளனர்.

பலரை காட்டு யானை துரத்தியுள்ளது. எங்கள் கிராமம் பனை மரங்களை அதிகம் கொண்ட பகுதி. இதனை சாப்பிடுவதற்காக யானை ஊருக்குள் வருகிறது.

இதனால் இரவு நேரங்களில் வெளியில் இறங்க முடியாது பல்வேறு துன்பங்களை அனுபவித்து வருகிறோம். பாலம்போட்டாறு ஜெயபுர பகுதியின் ஒரு பகுதி ஊடாக யானை வேலி காணப்பட்டாலும், எமது கிராமத்துக்கான பாதுகாப்பான வேலி இல்லை. இது தொடர்பில் பல முறை பிரதேச சபைக்கு கடிதம் மூலமான கோரிக்கை செய்யப்பட்டும், பலன் கிட்டவில்லை. இந்த குப்பை மேட்டு பிரச்சினை, யானை தொல்லைகளில் இருந்தும் பாதுகாப்பு பெற்றுத் தாருங்கள்'' என பத்தினிபுர மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தின் செயலாளர் எஸ்.கௌரி தனது கருத்தை உரத்த குரலில் வெளிப்படுத்தினார்.



எஸ்.கௌரி

மக்கள் இது தொடர்பில் போராட்டங்களை முன்னர் தீர்வு வேண்டி நடத்தியிருந்தாலும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்பது பெரும் குறைபாடாக காணப்படுகிறது.

குப்பை மேட்டினால் ஓரிரு பிரச்சினைகள் மாத்திரமல்ல, ஒட்டு மொத்தமாக சூழல் மாசடைவு உட்பட பல பாதகமான தாக்கங்களை உண்டுபண்ணுகிறது. இதனால் அதன் ஊடாக பயணிக்கும் பாதசாரிகள் அதனை அண்டியுள்ள குடியிருப்பு பிரதேச மக்களும் பாதிக்கப்படலாம்.

இவ்வாறான பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வின்றியே மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். யானை - மனித மோதல் ஏற்கனவே இருந்து வந்தாலும், குப்பை மேட்டினால் மேலும் இக்காட்டு யானைத் தொல்லை அதிகரித்து காணப்படுகிறது.

எனவே, இம்மக்களின் பிரச்சினைகளாகக் காணப்படும் யானைத்தொல்லை, குப்பை மேட்டை அகற்றுதல் என்பன தொடர்பில் எப்போது தீர்வு கிட்டும் என்பதே இம்மக்களின் ஏகோபித்த எதிர்பார்ப்பாகக் காணப்படுகிறது.

## இன்றைய நாளில்...

- 1832 – கனடாவில் கியூபெக்கில் அயர்லாந்துக் குடியேறிகளால் கொண்டுவரப்பட்ட ஆசிய வாந்திபேதி நோய் காரணமாக 6,000 பேர் வரையில் உயிரிழந்தனர்.
- 1962 – அல்ஜியர்ஸ் பல்கலைக்கழக நூலகக் கட்டடம் வலதுசாரி தீவிரவாதிகளால் எரியூட்டப்பட்டதில், 500,000 இற்கும் அதிகமான நூல்கள் எரிந்தன.
- 2000 – கொழும்பில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் அமைச்சர்சி.வி.குணரத்ன மற்றும் தெஹிவளை மாநகர உதவி மேயர் ஆகியோர் கொல்லப்பட்டனர்.
- 2006 – மட்டக்களப்பு மாவட்டத்தில் நெடுங்கல் கிராமத்தில் இடம்பெற்ற கண்ணிவெடியில் சிக்கி 6 மாதக் குழந்தை உட்பட 10 பேர் கொல்லப்பட்டனர்.
- 2007 – கொழும்பு விடுதிகளில் இருந்து தமிழர்கள் கட்டாயமாக வெளியேற்றப்பட்டனர்.




## 05.06.2023 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள்

**சினிமா மற்றும் தொலைக்காட்சி தொழிற்றுறைகளின் அபிவிருத்திக்காக சுயாதீன ஒழுங்குபடுத்தல் நிறுவனமொன்றை ஸ்தாபித்தல்**

உள்ளூர் சினிமாவின் அபிவிருத்திக்காக 1971 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் பிரகாரம் அரச திரைப்படக் கூட்டுத்தாபனம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன், 1980 ஆம் ஆண்டில் அது தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனமாகப் பெயரிடப்பட்டது. தற்போது திரைப்படத் தொழிற்றுறை பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து மிகவும் மோசமான பின்னடைவுகளைச் சந்தித்துள்ளதுடன், தொழிற்றுறையை மீண்டும் கட்டியெழுப்புவதற்காக ஒழுங்குபடுத்தல் பணிகளில் ஈடுபடக்கூடிய சுயாதீன நிறுவனமொன்றை ஸ்தாபிக்க வேண்டிய தேவை குறித்து கண்டறியப்பட்டுள்ளது. அத்துடன், திரைப்படத் தொழிற்றுறையின் வளர்ச்சிக்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்குவதற்கும் குறித்த தொழிற்றுறையை ஒழுங்குபடுத்துவதற்கும் சுயாதீன நிறுவனமொன்று இருத்தல் பொருத்தமானதெனத் தெரியவந்துள்ளது. அதற்கமைய, வெகுஜன ஊடக அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனையைக் கருத்தில் கொண்டு, சினிமா மற்றும் திரைப்படக்காட்சி தொழிற்றுறைகளின் அபிவிருத்திக்குத் தேவையான வசதிகளை வழங்குவதற்கும் - வழிகாட்டுவதற்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளது.

**இலங்கையில் நாட்பட்ட தொற்றல்லா நோய்களைத் தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்தலுக்கான தேசியக் கொள்கை மற்றும் மூலோபாயச் சட்டம்**

இலங்கையில் தொற்றல்லா நோய்கள் காரணமாக இடம்பெறுகின்ற அதிகளவான மரணங்களுக்கு இதய நோய், மாரடைப்பு, புற்றுநோய், நாட்பட்ட சுவாச நோய்கள் மற்றும் நீரிழிவு போன்ற நோய்கள் முக்கிய காரணங்களாக அமைவதுடன், ஒவ்வொரு ஆண்டும் இந்நோய்களால் 1,20,000 பேர் வரை இறக்கின்றனர். புகையிலைப் பாவனை, சாராயப் பாவனை, அதிகரித்த உடற்பருமன், உயர் குருதியமுத்தம், குருதியில் குளுக்கோசின் அளவு அதிகரித்தல் மற்றும் குருதியில் கொலஸ்ரோலின் அளவு அதிகரித்தல் போன்றன இந்நோய்களுக்கான முக்கிய காரணங்களாகக் கண்டறியப்பட்டுள்ளன. அதனால், இந்நோய்களை முற்கூட்டியே கண்டறிவதற்கான பரிசோதனை சேவைகளை வழங்கல் மற்றும் சரியான நேரத்தில் சிகிச்சையளிப்பதற்கு இயலுமாகும் வகையில் சுகாதாரக் கட்டமைப்புகளைப் பலப்படுத்த வேண்டியுள்ளது. தொற்றல்லா நோய்களைத் தடுப்பதற்கான முதலாவது தேசியக் கொள்கை 2009 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டுள்ளதுடன் குறித்த கொள்கையை மீளாய்வுக்குட்படுத்தி மதிப்பீடு செய்து ஏற்புடைய பங்காளர்களின் ஒத்துழைப்புகளுடன் திருத்தப்பட்ட புதிய கொள்கையொன்று வரைவாக்கம் செய்யப்பட்டுள்ளது. அதற்கமைய, தயாரிக்கப்பட்டுள்ள இலங்கையில் நாட்பட்ட தொற்றல்லா நோய்களைத் தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்தலுக்கான தேசியக் கொள்கை மற்றும் மூலோபாயச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காகவும் குறித்த தேசிய கொள்கை மற்றும் மூலோபாய சட்டத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் சுகாதார அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**முழுமையான அணு ஆய்வுப் பரிசோதனைகளுக்கான தடை ஒப்பந்தத்தை (CTBT) ஏற்புறுதி செய்தல்**

1996.09.10 அன்று ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையால் முழுமையான அணு ஆய்வுப் பரிசோதனைகளுக்கான தடை ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டது.

குறித்த உடன்படிக்கை மூலம் உலகில் எந்தவொரு இடத்திலும் "எந்தவொரு அணு ஆயுதப் பரிசோதனைகளை அல்லது அணு வெடிப்புகளை" தடை செய்வதற்கு உறுப்பு நாடுகள் உடன்பாடு தெரிவித்துள்ளன. இதுவரைக்கும் 186 நாடுகள் இந்த ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுள்ளதுடன், 177 நாடுகள் ஒப்பந்தத்தை ஏற்று அங்கீகரித்துள்ளன. இலங்கை முழுமையான அணு ஆய்வுப் பரிசோதனைகளுக்கான தடை ஒப்பந்தத்தில் 1996.10.24 அன்று கையொப்பமிட்டுள்ளது. இலங்கை தற்போது முழுமையான அணு ஆய்வுப் பரிசோதனைகளுக்கான தடை ஒப்பந்த அமைப்புடன் இணைந்து பயிற்சிகள், இயலளவு விருத்தி, தரவுகள் மற்றும் தகவல்களை விநியோகித்தல் போன்ற துறைகளில் ஒத்துழைப்புடன் செயலாற்றி வருகின்றது. குறித்த ஒப்பந்தத்தை ஏற்புறுதி செய்வதன் மூலம், அணு ஆயுதங்களற்ற உலக அமைதிக்கும் பாதுகாப்புக்குமான செயற்பாட்டாளராக இலங்கையின் இராஜதந்திர வகிபாங்குகளை ஏற்றுக்கொள்வதும், சுனாமி எச்சரிக்கைகள், காலநிலை மாற்றங்கள் மற்றும் நில ஆய்வுகள் போன்றன இலங்கை உள்ளிட்ட அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு அனுகூலங்களைப் பெற்றுத்தருகின்ற குடிசார் மற்றும் விஞ்ஞான ரீதியான நோக்கங்களுக்கான பயனுள்ள தரவுகளைப் பெற்றுக்கொள்வதற்கும் இயலுமை கிட்டும். அதற்கமைய இலங்கை முழுமையான அணு ஆய்வுப் பரிசோதனைகளுக்கான தடை ஒப்பந்தத்தை ஏற்று அங்கீகரிப்பதற்கும் குறித்த ஒப்பந்தத்தின் சட்ட ஏற்பாடுகளை வலுவாக்கம் செய்வதற்காகவும் சட்டம் இயற்றுவதற்குத் தேவையான படிமுறைகளை மேற்கொள்வதற்கும் வெளிவிவகார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**கம்பனியின் செயலாளர்களுக்குரிய கட்டளைகள் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின் கீழ் இற்றைப்படுத்தல்**

கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் மூலம் வழங்கப்படுகின்ற அனைத்து சேவைகளும் இணையவழியூடாக வழங்கப்படுகின்றமையால் குறித்த பணிகளை முறையான வகையில் மேற்கொண்டு செல்வதற்காக 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின் கீழ் விடயதானத்துக்குப் பொறுப்பான அமைச்சரால் விதிக்கப்பட்டுள்ள கம்பனியின் செயலாளர்களுக்கான ஒழுங்குவிதிகளைத் திருத்தம் செய்ய வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த பங்கீடுபாட்டாளர்கள் மற்றும் ஆலோசனைச் செயற்குழுவின் கருத்துகள் மற்றும் யோசனைகளைக் கருத்திற்கொண்டு கம்பனிச் செயலாளர்களுக்கான திருத்தப்பட்ட ஒழுங்குவிதிகள் 2023.03.17 ஆம் திகதிய 2323/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது. குறித்த திருத்தப்பட்ட ஒழுங்குவிதிகளை பாராளுமன்ற அங்கீகாரத்துக்காக சமர்ப்பிப்பதற்காக கைத்தொழில் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**1995 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வெளியிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகள்**

இலங்கையில் சர்வதேச நியமங்களுக்கு ஏற்ப தேசிய அளவீட்டு நியமங்களைப் பேணிச் செல்வதும், பல்வேறு துறைகளுக்கான அளவீட்டு சேவைகளை வழங்குவதும், அளவீடுகளின் அடிப்படையிலான ஒழுங்குபடுத்தல்கள் மற்றும் சேவைகள் செயற்பாடுகளின் மூலம் நியாயத்தை உறுதிப்படுத்துவதும், அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் முக்கிய பணிகளாகும். அதற்கமைய, 1995 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் சட்டத்தின் 3(ஈ) உபபிரிவின் கீழ் தேசிய அளவீட்டு ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்பட்டுள்ளதுடன், குறித்த நிலையத்தின் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக 2022.06.16 ஆம் திகதி தொடக்கம் அமுலாகும் வகையில் அளவீட்டு விஞ்ஞான ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவியை வெளியிட்டு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் 2022.08.26 ஆம் திகதிய 2294/54 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் ஒழுங்குவிதியொன்று வெளியிடப்பட்டுள்ளது. குறித்த ஒழுங்குவிதியை பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காக

வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**பெறுமதி சேர் வரி (VAT) விடுவித்தலின் அடிப்படை விதிமுறை மற்றும் இலகுபடுத்தப்பட்ட பெறுமதி சேர் வரி (SVAT) முறைமையை நீக்குதல்**

சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட நிதி வசதியளிப்பு வேலைத்திட்டத்துக்கமைய பெறுமதி சேர் வரி பற்றிய முக்கிய இரண்டு மறுசீரமைப்புகள் குறித்து அறிமுகப்படுத்த வேண்டியுள்ளது. அதன்கீழ் அதிகளவு விடுவித்தலை நீக்கி பெறுமதி சேர் வரி (VAT) முறைமையை மறுசீரமைப்புச் செய்தல், இலகுபடுத்தப்பட்ட பெறுமதி சேர் வரி (SVAT) முறைமை நீக்கப்பட வேண்டியுள்ளது. தற்போதுள்ள பெறுமதி சேர் வரியை விடுவித்தல் மீண்டும் அடிப்படை விதிமுறைகளுக்கமைய அண்ணளவாக மொத்தத் தேசிய உற்பத்தியின் 1.2% வீதமான வரி வருமானத்தை அதிகரிப்பதற்கு வாய்ப்புண்டு. அதற்கமைய, கல்வி, சுகாதாரம் மற்றும் விவசாயம் போன்ற துறைகளுக்கான விடுவிப்புகளைப் போலவே, குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள் மீதான அழுத்தங்களை இலகுபடுத்துகின்ற மற்றும் பொருளாதாரத்தின் முக்கிய துறைகளைப் பாதுகாக்கின்ற விடுவிப்புகளைத் தொடர்ந்தும் பேணிக்கொண்டு பெறுமதி சேர் வரி விடுவிப்புகளிலிருந்து அதிகளவை நீக்குவதற்கும், பெறுமதி சேர் வரியை மீளச் செலுத்துவதற்குமான மிகவும் முறைசார்ந்த பொறிமுறையொன்றை அறிமுகப்படுத்தி தற்போது நடைமுறையிலுள்ள இலகுபடுத்தப்பட்ட பெறுமதி சேர் வரி (SVAT) முறைமையை 2024.01.01 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் அகற்றுவதற்கு ஏற்றாற் போல் பெறுமதி சேர் வரிச்சட்டத்தின் ஏற்பாடுகளை திருத்தம் செய்வதற்கும், அதற்காக சட்டமூலமொன்றைத் தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்கும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**நீதிமன்றத்துக்கு, நியாயசபைக்கு அல்லது நீதி நிறுவனமொன்றை அவமதித்தல் பற்றிய சட்டமூலம்**

"நீதிமன்றத்தை அவமதித்தல்" தவறுகள் பற்றி தெளிவானதும் திட்டவட்டமானதுமான சட்ட ஏற்பாடுகள் மற்றும் சந்தர்ப்பத்திற்கேற்ற நிலைமைகள், எதிர்வழக்குரைப்பு மற்றும் தண்டனைகளைத் தளர்த்துதல் மற்றும் தண்டனைகளைத் தளர்த்தும் போது கடைப்பிடிக்க வேண்டிய நடவடிக்கை முறைகள் உள்ளடங்கலாக "நீதிமன்றத்தை அவமதித்தல்" பற்றிய சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்காக 2022.06.27 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்துக்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது. குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்துக்காக சமர்ப்பிப்பதற்காகவும் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**ஹொரணை ஏற்றுமதிப் பதனிடல் வலயத்தில் பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை மேம்படுத்தல்**

ஹொரணை ஏற்றுமதிப் பதனிடல் வலயத்தில் பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் கொள்ளளவு போதாமையால், கழிவுநீர் சூழவுள்ள உபரிநீர்க் கால்வாய்களுக்கு விடுவிக்கப்படுவதால் பொதுமக்கள் பெரும் சிரமங்களுக்கு ஆளாகின்றனர். அதனால், ஹொரணை ஏற்றுமதிப் பதனிடல் வலயத்தில் பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய மேம்படுத்தலின் கீழ் நாளொன்றுக்கு 2000 கனமீற்றர் கொள்ளளவுடைய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையமொன்றைத் துரிதமாக நிர்மாணிக்குமாறு உள்ளூராட்சி அதிகாரசபை இலங்கை முதலீட்டுச் சபையிடம் கோரியுள்ளது. இலங்கை முதலீட்டுச் சபையின் நிதியைப் பயன்படுத்தி இக்கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக பணிப்பாளர் சபை உடன்பாடு தெரிவித்துள்ளது. அதற்கமைய, இலங்கை முதலீட்டுச் சபையின் நிதியில் 1,110 மில்லியன் ரூபாவைப் பயன்படுத்தி ஹொரணை ஏற்றுமதிப் பதனிடல் வலயத்தில் பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை மேம்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரான ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**ஸ்ரீலங்கன் விமானசேவையின் ஹனிவெல் துணை மின்வழங்கல் அலகு (Honeywell APUs) திருத்த வேலைகளுக்கான ஒப்பந்தம் வழங்கல்**

ஸ்ரீலங்கன் விமானசேவையின் ஹனிவெல் துணை மின்வழங்கல் அலகுகளின் (Honeywell APUs) திருத்த வேலைகளுக்காக மட்டுப்படுத்தப்பட்ட சர்வதேச போட்டி விலைமுறிக் கோரல் முறைமையின் கீழ் விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளன. அதற்காக மூன்று விலைமுறிகள் கிடைக்கப் பெற்றுள்ளதுடன், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தரப் பெறுகைக் குழுவின் பரிந்துரைக்கமைய ஹனிவெல் துணை மின்வழங்கல் அலகு (Honeywell APUs) திருத்த வேலைகளுக்கான ஒப்பந்தம் 02 வருடங்களுக்கு 15.3 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மதிப்பீட்டு விலை விபரக்குறிப்புகள் அடங்கிய பதிலளிப்புகளுடன் கூடிய குறைந்தபட்ச விலைமனுவைச் சமர்ப்பித்த Honeywell International SARL நிறுவனத்துக்கு வழங்குவதற்காக துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமானசேவைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**அத்தியாவசிய மருந்துகளின் விலைகளைக் குறைத்தல்**

2015 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ள தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையால் மருந்துகளின் விலைகளை நிர்ணயம் செய்தல் மற்றும் அது தொடர்பான அனைத்து விடயங்களுக்குமான ஒழுங்குபடுத்தல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. ஐக்கிய அமெரிக்க டொலருக்கு எதிராக ரூபா வீழ்ச்சியடைந்துள்ளமையைக் கருத்தில் கொண்டு, மருந்துகளின் உயர்ந்தபட்ச சில்லறை விலைகளை ஒருசில சந்தர்ப்பங்களில் 97% சதவீதத்தால் அதிகரிப்பதற்கு சுகாதார அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது. அரசாங்கத்தால் கடைப்பிடிக்கப்படுகின்ற சமகால பொருளாதார உறுதிப்பாட்டு வேலைத்திட்டத்தின் விளைவாக அமெரிக்க டொலரின் பெறுமதி குறிப்பிடத்தக்களவு குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றது. அதற்கமைய, 60 வகையான மருந்துகளின் உயர்ந்தபட்ச சில்லறை விலைகளை 2023.06.15 தொடக்கம் அமுலாகும் வகையில் 16% சதவீதத்தினால் குறைப்பதற்காகவும் மற்றும் மூன்று மாதங்களுக்கொருமுறை மருந்துகளின் விலைகளை மீளாய்வு செய்வதற்காகவும் சுகாதார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பகிரங்க ஏலவிற்பனை

வெலிபல் பினான்ஸ் நிறுவனத்தில் உத்தரவாத அடிப்படையில் அடகு வைத்து கடன் பெற்று, உரிய காலத்தினுள் மீட்கப்படாத தங்க நகைகள் இல: 310, காலி வீதி, கொழும்பு 03 இல் 2023 ஜூன் மாதம் 23 திகதி மு.ப. 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விடப்படும்.

எந்தவொரு முன்னறிவித்தலும் இன்றி ஏலத்தை நிறுத்தவோ, பின்தள்ளி போடவோ வெலிபல் பினான்ஸ் நிறுவனத்திற்கு உரிமை உள்ளது

தங்க கடன் பிரிவு
வெலிபல் பினான்ஸ் பீ எல் சீ
இல: 310, காலி வீதி, கொழும்பு 03

வெலிபல் ஃபினான்ஸ்

# ஒரேசூலில் நான்கு குழந்தைகளை பிரசவித்த தாய்க்கு நிதியுதவி





(வாழைச்சேனை செய்தியாளர்)

ஒரே சூலில் நான்கு குழந்தைகளைப் பிரசவித்த குருநாகல் மாவட்டத்துக்குட்பட்ட தோரயாய, அட்டமுனை பகுதியைச் சேர்ந்த துஷாணி லசங்கார (30 வயது) என்ற இளம் தாய்க்கு தியாகி அறக்கொடை நிதியத்தினால் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

மூன்று ஆண், ஒரு பெண் என நான்கு குழந்தைகளையும் கடந்த மாதம் பேராதனை போதனா வைத்தியசாலையில் இவர் பிரசவித்துள்ளார்.

இக்குடும்பத்தின் நிலைமையைக் கருத்திற்கொண்டு ஸ்ரீ லங்கா மீடியா போரத்தின் பணிப்பாளரும் ஊடகவியலாளருமான எம்.ரீ.எம்.பாரிஸ் தியாகி அறக்கொடை நிதியத்தின் ஸ்தாபகத் தலைவர் வாமதேவன் தியாகேந்திரனின் கவனத்துக்குக் கொண்டு சென்றதற்கிணங்க முதற்கட்டமாக ஒரு இலட்சம் ரூபா நிதியுதவி இக்குழந்தைகளின் பராமரிப்புக்காக தியாகி அறக்கொடை நிதியத்தின் இணைப்பாளரும் ஸ்ரீ லங்கா மீடியா போரத்தின் பணிப்பாளரும் ஊடகவியலாளருமான எம்.ரீ.எம்.பாரிஸ் மூலம் குறித்த தம்பதியினரின் இல்லத்தில் வைத்து ஒப்படைக்கப்பட்டது.

இன, மத வேறுபாடுகளைக் கடந்து நாம் அனைவரும் மனிதர்கள் என்ற அடிப்படையில் பாதிக்கப்பட்ட - தேவையுடைய மக்கள் தன்னிடம் கேட்காமலே அவர்களின் இல்லம் தேடிச்சென்று உதவும் தன்மையை தியாகி அறக்கொடை நிதியத்தின் தலைவர் வாமதேவன் தியாகேந்திரன் வழங்கியுள்ளமை பாராட்டப்படவேண்டிய தொன்றாகும் என அங்கு கருத்துத் தெரிவித்த ஊடகவியலாளர் எம்.ரீ.எம்.பாரிஸ் தெரிவித்தார்.

நான்கு குழந்தைகளைப் பிரசவித்துள்ள துஷாணி லசங்கார கருத்துத்தெரிவிக்கும் போது,

இன, மத, மொழி வேறுபாடுகளைக் கடந்து யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக்கொண்ட தியாகி அறக்கொடை நிதியத்தின் தலைவர் வாமதேவன் தியாகேந்திரன் ஐயா எனது குழந்தைகளின் பராமரிப்புக்காக உதவ முன்வந்தமை பெருமகிழ்ச்சியளிக்கிறது.

இந்த நாட்டில் மனிதாபிமானமிக்க இலங்கையர்கள் வாழ்கிறார்கள் என்பதற்கு இது நல்லதொரு முன்னுதாரணமாகும்.

இச்சந்தர்ப்பத்தில் எனக்கு உதவிய அந்த நல்லுள்ளத்துக்கும் இவ்வுதவியை எனது காலடிக்கு கொண்டு சேர்த்த ஊடகவியலாளர் எம்.ரீ.எம்.பாரிஸுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

மேலும், இவ்வாறான நான்கு குழந்தைகளைப் பிரசவித்துள்ள புத்தளத்தைச் சேர்ந்த முஸ்லிம் தாய்க்கும் மற்றும் மூன்று குழந்தைகளைப் பிரசவித்துள்ள ஹட்டன்- மஸ்கெலியா புரன்வீன் ராணி தோட்டதைச் சேர்ந்த தமிழ்த் தாய்க்கும் குழந்தைப் பராமரிப்பு உதவித்தொகைகள் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறான மனிதாபிமான வேலைத்திட்டங்களைத் தொடர்ந்தும் தியாகி அறக்கொடை நிதியம் வழங்குவதற்கு தயாராகவிருப்பதாக அதன் தலைவர் வாமதேவன் தியாகேந்திரன் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மேல் மாகாணத்தில் திண்ம கழிவு மீள் சுழற்சித் திட்டம்



(அஷ்ரப் ஏ.சமத்)

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் திண்மக் கழிவு மீள் சுழற்சித் திட்டம் மேல் மாகாணத்தில் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டே இத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இத்திட்டத்துக்கு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் அனுசரணை வழங்குகின்றது.

இலங்கையில் நாளாந்தம் பிளாஸ்ரிக் கழிவுகள் சேகரிக்கப்பட்டு அவை மீள் சுழற்சி செய்யப்பட்டு வீட்டுப் பாவனைப் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. அத்துடன், அவ்வுற்பத்திப் பொருட்கள் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டு அந்நியச் செலாவணி பெற்றுக்கொள்ளப்படுகின்றது. இத்திட்டம் பற்றி ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :-பிளாஸ்ரிக் கழிவுப் பொருடகள் ஆங்காங்கே கொட்டப்படுவதாலேயே சூழல் மாசடைகிறது.

அதாவது, இக்கழிவுகள் கடலோரங்கள், வன வளங்கள், வாவிகள் போன்ற இடங்களில் கொட்டப்படும்போது சுற்றாடல் வெகுவாகப் பாதிக்கப்படுவதோடு உயிரினங்களும் அழிவுற்று வளிமண்டலமும் மாசடைகின்றது.

இதுவரை ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 33 வீதமான பிளாஸ்ரிக் பொருட்கள் சேகரிக்கப்பட்டு மாநகர , நகர பிரதேச சபைகளின் கீழ் உள்ள திண்மக் கழிவு அகற்றும் திட்டத்தின் கீழ் 3 வீதமே மீள் சுழற்சி செய்யப்பட்டு வருகின்றது. இந்நிலையில், இலங்கையின் சீரான சுற்றாடல் திட்டத்துக்காக இலங்கை அரசுக்கு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பிளாஸ்ரிக் மற்றும் திண்மக் கழிவுகளை சீராக்கி அதனை மீள் சுழற்சி செய்யும் முன்மாதிரியான 'ரிக் டொக்' திட்டமொன்றை ஆரம்பித்து வைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
திங்கட்கிழமை 2023.06.05
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

| | சீட்டிழுப்பு இலக்கம் | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கினம் | வெற்றி இலக்கங்கள் |
|---|---|---|---|---|
| மஹஜன சம்பத | 5136 | ரூ. 10,000,000.00 | S | 8 8 6 3 8 5 |
| கொவிசெத | 3378 | ரூ. 60,402,707.20 | B | 01 14 45 63 |
| ஜாதிக சம்பத | 1591 | ரூ. 11,925,865.00 | | 6 9 6 8 0 3 |
| தன நிதானய | 1166 | ரூ. 93,197,858.40 | L | 23 39 69 77 |
| ராசி சுப பலன் Handahana | 445 | ரூ. 3,140,491.80 | தனுசு | 23 44 49 56 |
| Mega Power | 1484 | ரூ. 326,979,226.00 | N (சுப்பர் இலக்கம் 22) | 12 47 56 67 |

விசேட இலக்கினம்: தனுசு
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

# சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு வவுனியா தேசியக் கல்லூரி ஆசிரிய மாணவர்கள் ஊர்வலம்








*(வவுனியா நிருபர்)*

சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு வவுனியா தேசியக் கல்லூரி ஆசிரிய மாணவர்களால் நேற்று முன்தினம் (05) மதியம் மரநடுகையும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வும் இடம்பெற்றன.

தேசிய கல்வியியல் கல்லூரியிலிருந்து பூந்தோட்டம் சந்திவரை ஊர்வலமாகச் சென்ற ஆசிரிய மாணவர்கள் சூழல் பாதுகாப்பு தொடர்பான படங்களையும் சுலோக அட்டைகளையும் தமது கைகளில் ஏந்தியிருந்தனர். பூந்தோட்டம் சந்தியை அடைந்ததும் பொதுமக்களுக்கு மரநடுகைக்கான மரங்கள் விநியோகிக்கப்பட்டு மீண்டும் ஊர்வலமாக தேசிய கல்வியியல் கல்லூரியை வந்தடைந்தனர்.

கல்லூரி வாயிலில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான குறியீட்டு நாடகம் ஒன்று ஆசிரிய மாணவர்களால் மேற்கொள்ளப்பட்டது.

குறித்த நிகழ்வில் தேசிய கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர்கள், ஆசிரிய மாணவர்கள், பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

# மன்னாரில் தியாகி பொன். சிவகுமாரனின் 49 ஆவது ஆண்டு நினைவேந்தல்

*(மன்னார் நகர் நிருபர்)*



தமிழீழத்தின் முதல் தற்கொலையாளர் தியாகி பொன். சிவகுமாரனின் 49ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று முன்தினம் (5) மதியம் மன்னாரில் அனுஷ்டிக்கப்பட்டது.

தமிழீழ விடுதலை இயக்கம் ரெலோ மன்னார் மாவட்ட அலுவலகத்தில் கட்சியின் மாவட்ட அமைப்பாளர் லுஸ்ரின் மோகன்ராஜ் தலைமையில் குறித்த நினைவேந்தல் இடம்பெற்றது.

இதன் போது தியாகி பொன். சிவகுமாரனின் படத்துக்கு சுடர் ஏற்றி - மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. குறித்த நினைவேந்தல் நிகழ்வில் ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆர்.குமரேஸ், பாராளுமன்ற உறுப்பினரின் செயலாளர் டானியல் வசந்த்,கட்சியின் முக்கியஸ்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

# ஞானவைரவர் ஆலயத்தின் பொங்கல் மடை உற்சவம்




*(வட்டுக்கோட்டை நிருபர்)*

கைதடி தெற்கு பிள்ளையார் வீதியில் அமைந்துள்ள ஞானவைரவர் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் மடை உற்சவம் நேற்று முன்தினம் (05) அபிஷேக ஆராதனைகளுடன் வெகு சிறப்பாக நடைபெற்றது.

அதனையடுத்து இரவு 7 மணியளவில் தெய்வங்களின் ஆசீர்வாதத்துடன் மடை பண்டங்கள் எடுக்கப்பட்டு பின்னர் பஜனைகள் இடம்பெற்றன. இதனையடுத்து நேற்று அதிகாலை 2.30 மணியளவில் வழந்து பூஜை இடம்பெற்றது. பல்வேறு பகுதிகளிலும் இருந்து வருகை தந்த பக்தர்கள் வைரவப் பெருமானின் ஆசிகளைப் பெற்றுச்சென்றனர்.

# நாவற்குழியில் சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு பசுமை அறிவொளி நிகழ்வு



*(வட்டுக்கோட்டை நிருபர்)*

தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு நாவற்குழியில் நேற்று முன்தினம் (05) பசுமை அறிவொளி நிகழ்ச்சியை வெகு சிறப்பாக நடத்தியுள்ளது.

தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் மாணவர்களிடையே சூழல் அறிவைப் புகட்டி விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் அவர்களைச் சூழல் பாதுகாப்பில் பங்குபற்றுநர்களாக்கும் நோக்குடன் பசுமை அறிவொளி என்ற நிகழ்ச்சித் திட்டத்தை முன்னெடுத்து வருகிறது.

இதன் தொடர்ச்சியாகவே உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு நாவற்குழி முத்தமிழ் கிராமத்தில் இந்நிகழ்ச்சி நடைபெற்றுள்ளது.

இந்த ஆண்டின் சுற்றுச்சூழல் தினத்தின் கருப்பொருளாக ஐக்கிய நாடுகள் சபை 'பிளாஸ்ரிக் மாசைத் தோற்கடிப்போம்' என்ற கருப்பொருளைத் தெரிவுசெய்துள்ளது. இக்கருப்பொருளுக்கமைவாக தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் இந்நிகழ்ச்சியில் உரையாற்றியதோடு, பங்கேற்ற மாணவர்களுக்கு 'பிளாஸ்ரிக்கின் பிடியில்' என்ற கைநூலையும் வழங்கினார். அத்தோடு, ரொறன்ரோவின் மனிதநேயக் குரலின் அனுசரணையோடு மாணவர்கள் அனைவருக்கும் அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# வரணி விபத்தில் இளைஞன் பலி!

*(சாவகச்சேரி நிருபர்)*



கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வரணி பிரதேச வைத்தியசாலைக் கருகாமையில் நேற்று (06) செவ்வாய்க்கிழமை அதிகாலை 3.30 மணியளவில் இடம்பெற்ற மோட்டார்சைக்கிள் விபத்தில் குடத்தனைப் பகுதியைச் சேர்ந்த 31 வயதான இளைஞனொருவர் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளார். வற்றாப்பளை அம்மன் ஆலயத்திலிருந்து கொடிகாமம் ஊடாக குடத்தனை நோக்கிப் பயணித்தபோதே வரணிப் பகுதியில் மோட்டார்சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து மின் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியது.

இதில் மோட்டார் சைக்கிளைச் செலுத்திய குடத்தனைப் பகுதியைச் சேர்ந்த 31 வயதான குணசெல்வம் நிறோயன் என்ற இளைஞனே பலியாகியுள்ளார்.

உயிரிழந்த இளைஞனது சடலம் பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைகளுக்காக மந்திகை வைத்தியசாலையில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# 648 வெற்று காஸ் சிலிண்டர்களுடன் கடத்தப்பட்ட வாகனம் பொலிஸாரால் மீட்பு

*(வவுனியா நிருபர்)*



வவுனியா, நெளுக்குளம் பகுதியிலிருந்து 648 வெற்று காஸ் சிலிண்டர்களுடன் கடத்தப்பட்ட வாகனம் நெளுக்குளம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

நேற்று (05.06) காலை இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

வவுனியா, நெளுக்குளம் பகுதியில் வர்த்தக நிலையமொன்றை நடத்திவரும் பெண்ணொருவர் காஸ் விநியோகத்தில் ஈடுபட்டு வந்துள்ளார். இந்நிலையில், குறித்த பெண்ணின் வர்த்தக நிலையப் பகுதிக்கு வந்த காஸ் விநியோக வாகனம் 648 வெற்று காஸ் சிலிண்டர்களுடன் அங்கு நிறுத்தப்பட்டிருந்தது.

இதன்போது, அங்கு வந்த குறித்த பெண்ணின் மூத்த மகன் வெற்று காஸ் சிலிண்டருடன் அங்கு நின்ற வாகனத்தை எடுத்துக்கொண்டு தப்பியோடியுள்ளார். இதனையடுத்து குறித்த பெண் தனது மகனுக்கு எதிராக நெளுக்குளம் பொலிஸில் செய்த முறைப்பாட்டையடுத்து விரைந்து செயற்பட்ட பொலிஸார் குறித்த வாகனத்தை வெற்றுச் சிலிண்டர்களுடன் மீட்டுள்ளதுடன், குறித்த நபரையும் கைதுசெய்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளின் பின் குறித்த நபரையும் வாகனத்தையும் நீதிமன்றில் முற்படுத்த நெளுக்குளம் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# இலஞ்சம் பெற்றுக்கொண்ட அதிகாரிகள் இருவர் கைது

*(கண்டி செய்தியாளர்)*

அலவத்துகொடை பிரதேச கமநல சேவைகள் மத்திய நிலைய அதிகாரிகள் இருவர் ஒரு இலட்சம் ரூபா இலஞ்சம் பெற்றுக்கொண்டபோது இலஞ்ச ஊழல் விசாரணைத் திணைக்கள அதிகாரிகளால் நேற்று (06) கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வயற்காணி ஒன்றை தரைக்காணியாக மாற்றி போலி ஆவணம் தயாரித்து வழங்குவதற்கே ஒரு இலட்சம் ரூபா இலஞ்சம் கோரப்பட்டுள்ளது.

இது தொடர்பில் காணி உரிமையாளர் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்துள்ளதையடுத்து இலஞ்சம் பெற்றுக்கொண்ட இருவரும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களில் ஒருவர் விவசாய ஆய்வு உத்தியோகத்தராகவும் மற்றவர் உற்பத்தி உதவி அதிகாரியாகவும் பணியாற்றுவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ள அலவத்துகொட பொலிஸார் சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

# மலையகத்தின் மேம்பாட்டுக்காக அமெரிக்காவின் உதவி தொடரும்

## தூதுவர் ஜூலி நுவரெலியாவில் உறுதி




*(எஸ். கணேசன்)*

மலையக பெருந்தோட்ட மக்களின் எதிர்கால பாதையை மாற்றுவதற்கான தருணமே இதுவெனவும் மலையக மேம்பாட்டுக்காக அமெரிக்கா தொடர்ந்து உதவிகளை வழங்குமெனவும் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் உறுதிபடத் தெரிவித்தார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமானின் அழைப்பின் பேரில் நுவரெலியா மாவட்டத்துக்கு களப்பயணம் மேற்கொண்ட அமெரிக்கத் தூதுவர், பல தரப்பு சந்திப்புகளில் ஈடுபட்டதுடன், மக்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்களையும் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இந்தவிஜயத்தின் ஓரங்கமாக ஹட்டனில் உள்ள தொண்டமான் தொழில் பயிற்சி நிலையத்துக்குச் சென்ற அமெரிக்கத் தூதுவருக்கு உற்சாக வரவேற்பளிக்கப்பட்டது.

அதன்பின்னர் அதிகாரிகள் மற்றும் அங்கு பயிற்சிபெறும் மாணவர்களுடன் தூதுவர் கலந்துரையாடினார். இதன்போது, இருதரப்பு உறவுகளுக்கான நினைவுச் சின்னங்களும் வழங்கி வைக்கப்பட்டன

சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி காந்தி சௌந்தர்ராஜன், பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் பாரத் அருள்சாமி, அமைச்சர் ஜீவன் தொண்டமானின் இணைப்புச்செயலாளர் அர்ஜுன் ஜெயராஜ் ஆகியோருடன் கலந்துரையாடல்களில் ஈடுபட்ட அமெரிக்கத் தூதுவர் ஆங்கிலம் மற்றும் தொழில்நுட்பக் கல்விக்கு உதவிகள் வழங்கப்படும் என உறுதியளித்தார்.

அத்துடன், கல்வி, சுகாதாரம் என மலையக பெருந்தோட்டப் பகுதிகளில் பல வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கும் இணக்கம் தெரிவித்தார்.

மேலும், "நுவரெலியா மாவட்டம் உள்ளிட்ட பகுதிகளில் வாழும் மலையக பெருந்தோட்ட மக்கள் கடந்த காலங்களில் பல சவால்களை எதிர்கொண்டனர். பல தடைகள் இருந்தன. இதனை நான் அறிவேன். எனவே, மலையக பெருந்தோட்ட மக்களின் எதிர்காலத்துக்கான பாதையை மாற்றுவதற்கான சிறந்த தருணமே இது. இலங்கை தற்போது மீண்டெழுகின்றது. வர்த்தகம் மற்றும் முதலீடுகளைக் கொண்டு வருவதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம். உங்களுக்கு உதவுவதற்கான பங்காளியாக நாம் இருப்போம்." - என்றார்.

# கஞ்சா சுருட்டினால் மனைவிக்கு சூடு

## பலாங்கொடையில் கணவர் கைது

*(ஏ.ஏ.எம்.பாயிஸ்)*

பலாங்கொடையில் தனது மனைவியின் உடம்பில் பல இடங்களில் கஞ்சா சுருட்டினால் சூடுவைத்த குற்றச்சாட்டில் அந்தப் பெண்ணின் கணவர் பொலிஸாரால் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பலாங்கொடை சமனலவெவ பொலிஸ் பிரிவைச் சேர்ந்த பம்பஹின்ன கிராமத்தைச் சேர்ந்தவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

வழமையாக கஞ்சா புகைத்து விட்டு போதையில் தனது மனைவியை சித்திரவதை செய்யும் இவர் நேற்றும் கஞ்சா போதையில் மனைவிக்கு உடலின் பல இடங்களில் கஞ்சா சுருட்டால் சூடுவைத்துள்ளார். இதனைத் தாங்கிக்கொள்ள முடியாத நிலையில் மனைவி சமனலவெவ பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்த பின் பலாங்கொடை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மனைவியின் முறைப்பாட்டையடுத்து கணவரைக் கைதுசெய்துள்ள பொலிஸார் சந்தேக நபரை நீதிமன்றில் ஆஜர்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# சிறுத்தைகளின் நடமாட்டம் அதிகரிப்பு

*(மனுர சுதத் செல்லஹேவ)*

கொட்டகலை ட்ரேட்டன் தோட்டத்தில் சிறுத்தைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். இதனால் வெளியில் நடமாடுவதற்கு அச்சமடைந்துள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ட்ரேட்டன் தோட்ட தேயிலை மலைகளில் சிறுத்தைகளை அடிக்கடி காண்பதாகவும் இது குறித்து உரிய அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டுவந்தபோதும் அவர்கள் எந்தவித நடவடிக்கையையும் எடுக்கவில்லையெனவும் மக்கள் தெரிவித்தனர்.



மத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளராக திருமதி ஏ.எம்.சி.கே. அத்தபத்து நியமிக்கப் பட்டுள்ளார். இவருக்கான நியமனக் கடிதத்தை மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ. கமகே ஆளுநர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் வழங்கிவைத்தார். *(கண்டி செய்தியாளர்)*

# நுவரெலியாவில் அதிக விலைக்கு லிட்ரோ எரிவாயு விற்பனை

*(தலவாக்கலை நிருபர்)*

நுவரெலியாவில் அதிக விலையில் சமையல் எரிவாயு விற்பனை செய்யப்படுவதாக புகார் தெரிவிக்கும் பொது மக்கள், இது தொடர்பில் நுகர்வோர் அதிகார சபையின் நுவரெலியா கிளை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கின்றனர்.

லிட்ரோ சமையல் எரிவாயு சிலிண்டரின் விலையை 452 ரூபாவால் லிட்ரோ நிறுவனம் கடந்த (4) ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு முதல் உத்தியோக பூர்வமாக குறைத்த போதிலும் நுவரெலியா மாநகரசபை எல்லைக்குட்பட்ட பல சமையல் எரிவாயு விற்பனை செய்யும் கடைகளில் பழைய விலைக்கே விற்பனை செய்வதாக பாவனையாளர்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

லிட்ரோ நிறுவனத்தால் அறிவிக்கப்பட்ட மாவட்ட ரீதியிலான பட்டியலில் நுவரெலியா மாவட்டத்தில் 12.5 கிலோ கிராம் நிறையுடைய சமையல் எரிவாயு சிலிண்டர் ஒன்று 3,343 ரூபாவிற்கு விற்பனை செய்ய வேண்டும்.

ஆனாலும் நேற்று முன்தினம் (05) திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு நுவரெலியா நகரை அண்மித்த கிராம கடை ஒன்றில் 3,800 ரூபாவிற்கு 12.5 கிலோ கிராம் நிறையுடைய சமையல் எரிவாயு சிலிண்டர் விற்பனை செய்யப்பட்டுள்ளது. 12.5 கிலோ கிராம் நிறையுடைய சமையல் எரிவாயுவை 3,800 ரூபா வழங்கி சமையல் எரிவாயு சிலிண்டரைப் பெற்றுக்கொண்ட நபர் தான் வழங்கிய பணத்திற்கு பற்றுச்சீட்டு கேட்டபோதே சம்பந்தப்பட்ட வர்த்தகர் பற்றுச்சீட்டு வழங்க மறுத்துள்ளார்.

விலை அதிகரிக்கப்படும்போது உடனடியாக அதிகரிக்கின்றார்கள், விலை குறைக்கப் படும்போது வர்தகர்கள் விலையை குறைப்ப தில்லையென பொது மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். எனவே, இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# இலங்கையின் கடல் வளத்தை முழுமையாகப் பயன்படுத்தத் திட்டம்

## இலங்கை, மாலைதீவு கடற்றொழில் அமைச்சர்கள் விரிவாக ஆராய்வு

இலங்கையைச் சூழவுள்ள கடல் பரப்பில் இலங்கை கடற்றொழிலாளர்கள் முழுமையான நன்மைகளைப் பெற்றுக்கொள்ளும் வகையில் மாலைதீவில் பயன்பாட்டிலுள்ள தொழில் முறைகளைக் கையாள்வதற்கு ஆலோசிக்கப்பட்டுள்ளது. இவ்விடயம் தொடர்பாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் மாலைதீவு கடற்றொழில் மற்றும் விவசாயத்துறை அமைச்சர் ஹுசைன் ரஸீட் ஹசனுக்குமிடையில் இடம்பெற்ற சந்திப்பின்போது விரிவாக ஆராயப்பட்டுள்ளது.





இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள மாலைதீவு கடற்றொழில் மற்றும் விவசாயத் துறை அமைச்சர், இலங்கையின் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை நேற்றுமுன் தினம்(05) கடற்றொழில் அமைச்சில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது, இலங்கைக்கும் மாலைதீவுக்குமிடையிலான நீண்ட நட்புறவுகளை நினைவு படுத்திய இரண்டு நாடுகளின் அமைச்சர்களும் எதிர்காலத்திலும் ஆழமான நட்புறவு தொடரும் என்ற நம்பிக்கையையும் வெளியிட்டனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கடற்றொழிலை பிரதானமான பொருளாதார மார்க்கமாகக் கொண்டுள்ள மாலைதீவின் அனுபவங்களையும் தொழில்நுட்பங்களையும் பகிர்ந்து கொள்வதற்கு ஆர்வமாக இருப்பதாகவும் அதற்கான திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுப்பது ஆரோக்கியமானதாக இருக்குமெனவும் தெரிவித்தார்.

குறிப்பாக, அரபிக் கடலில் மீன்பிடிக்கச் செல்வதற்கான பயணப் பாதையாக மாலைதீவு கடல் பரப்பை இலங்கை கடற்றொழிலாளர்கள் பயன்படுத்த அனுமதிப்பது தொடர்பாகவும் ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபடுகின்ற இலங்கை கடற்றொழிலாளர்கள் அசாதாரண சூழலை எதிர்கொள்கின்ற சந்தர்ப்பங்களில் அவர்களை பாதுகாப்பதற்கான இணைந்த பொறிமுறை ஒன்றின் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

அதேபோன்று சீநோர் நிறுவனத்தின் ஊடாக உற்பத்தி செய்யப்படுகின்ற மீன்பிடிப் படகுகளுக்கு மாலைதீவில் சந்தை வாய்ப்பை உருவாக்கிக் கொள்வது தொடர்பாகவும் நீர்வேளாண்மை மூலம் உற்பத்தி செய்யப்படுகின்ற மீன்களுக்கான உணவுகளைப் பெற்றுக்கொள்வது மற்றும் தரமான உணவுகளை இலங்கையில் உற்பத்தி செய்வது தொடர்பாகவும் தனது எதிர்பார்ப்பை வெளிப்படுத்தினார்.

இந்நிலையில், கருத்து தெரிவித்த மாலைதீவு கடற்றொழில் அமைச்சர், இலங்கையின் நட்பு நாடு என்றவகையில் சாத்தியமான அனைத்து வகையான ஒத்துழைப்புகளும் - உதவிகளும் தொடருமெனவும் மாலைதீவு கடற் பரப்பை பயணப் பாதையாகப் பயன்படுத்த விரும்பினால் 72 மணித்தியாலங்களுக்கு முன்னர் மாலைதீவு அதிகாரிகளுக்கு தெரியப்படுத்திய பின்னர் பயணிக்க முடியுமெனவும் இலங்கை கடற்றொழில் அமைச்சரின் ஏனைய எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்கான சாத்தியங்கள் தொடர்பாக ஆராயப்படுமெனவும் தெரிவித்தார்.

குறிப்பாக, மாலைதீவின் பிரதான மீன்பிடி முறையான தூண்டில் முறையை இலங்கையில் பயன்படுத்துவதால் கரையோர மீன்பிடியை விருத்திசெய்ய முடிவதுடன் இலங்கையை சூழவுள்ள கடல் வளத்தை முழுமையாகப் பயன்படுத்தும் நிலை ஏற்படும் என்பதுடன், ஆழ்கடல் தொழிலில் ஏற்படுகின்ற கால விரயம் மற்றும் உற்பத்திச் செலவு போன்றவற்றையும் மீதப்படுத்த முடியுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன், இலங்கை கடற்றொழிலாளர்கள் ஐஸ் கட்டிகளுக்காக கணிசமானளவு செலவு செய்வதை சுட்டிக்காட்டிய மாலைதீவு கடற்றொழில் அமைச்சர், தங்களது நாட்டில் கடற்றொழிலாளர்கள் பயன்படுத்தும் குளிர் நீர் பொறிமுறையைப் பயன்படுத்துவதன் மூலம் செலவைக் குறைத்துக்கொள்ள முடியுமெனவும் அதுதொடர்பான தொழில்நுட்பங்களையும் அனுபவங்களையும் பகிர்ந்துகொள்ளத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

இச்சந்திப்பில், மாலைதீவின் கடற்றொழில் அமைச்சருடன் அவ்வமைச்சின் உதவி அமைச்சர் அமைச்சின் உயரதிகாரிகள், இலங்கை கடற்றொழில் அமைச்சின் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த, அமைச்சின் செயலாளர்கள் மற்றும் கடற்றொழில் அமைச்சின் கீழ் இருக்கும் நிறுவனங்களின் தலைவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.







வத்தளை, ஹுணுப்பிட்டிய அருள்மிகு ஸ்ரீ முத்துக்குமரன் ஆலயத்தின் வருஷாபிஷேக அலங்கார உற்சவத்தை முன்னிட்டு ஆலய பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ சி.சோதிரத்தினக் குருக்கள் தலைமையில் விஷேட வசந்த மண்டப பூஜை இடம்பெற்று சுவாமிகள் உள்வீதி வலம் வருவதையும் அதில் கலந்துகொண்ட ஆலய பரிபாலன சபையின் தலைவர் டீ.கனகேஷ்வரன் மற்றும் பக்தர்களையும் காணலாம்.



நயினாதீவு நாக பூஷணி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 19ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. இதனை முன்னிட்டு ஆலய பிரதம குருக்களிடம் கொடிச்சீலை கையளிக்கப்பட்டது.

# சுற்றாடல் சட்டத்தைத் திருத்த ஜனாதிபதி எடுக்கும் முயற்சி பாராட்டத்தக்கது

## சுற்றாடல் ஊடகவியலாளர் அருண டயஸ்

நாட்டில் 43 வருடங்கள் பழமையான சுற்றாடல் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எடுக்கும் முயற்சியானது பாராட்டத்தக்கது என சுற்றாடல் ஊடகவியலாளர் அருண டயஸ் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடகப் பிரிவின் 101 ஆவது கலந்துரையாடல் நிகழ்வில் நேற்று முன்தினம் (05) கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் இவ்விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கையில், 2048 இல் பசுமை பொருளாதாரத்தை நோக்கி இலங்கை நகர்வதற்கான வேலைத்திட்டத்துக்கு இணையாக 47 ஆம் இலக்க சுற்றாடல் திருத்தச் சட்டமூலம் தற்போதும் நீதித்துறையினரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு சிங்கராஜ வனம், ஹோட்டன் தென்னை, நக்கில்ஸ் மலைத்தொடர் பகுதி மற்றும் மகாவலி வலயங்களை உயிர்ப்புடன் காணப்படும் (living entities) அம்சங்களாக அறிவிப்பதற்கான பிரகடனமொன்றை உருவாக்குவதற்கான ஜனாதிபதியின் செயலாளர் தலைமையிலான குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

சுற்றாடல் என்பது மிகப்பெரிய விடயப்பரப்பும் வளமுமாகும். சுற்றாடல் பாதுகாப்பை தனியொருவரால் மாத்திரம் உறுதிப்படுத்திவிட முடியாது. அனைவரும் ஒன்றுபட்டு சுற்றாடல் பாதுகாப்புக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டியது அவசியம். அதேபோல், பசுமை பொருளாதாரம் ஒன்றை நாம் உருவாக்கத் தவறும் பட்சத்தில் உயிர் அச்சுறுத்தல்களுக்கும் முகம் கொடுக்க நேரிடலாம்.

எனவே, தற்போதைய நிலையில் சுற்றாடல் பாதுகாப்புக்கான வலுவான சட்டங்கள் அவசியம்.



சுற்றாடல் பற்றிய மாற்றுச் சிந்தனைகள் சமூகத்தில் தோற்றம் பெற ஆரம்பித்துள்ள நிலையில், வியாபாரிகள் மாத்திரமின்றி பொது மக்களும் புதிய முயற்சிகளின் போது சுற்றாடல் என்ற விடயத்தை மறந்து செயற்பட ஆரம்பித்துள்ளனர். அதனால் சட்டதிட்டங்களுக்கு மாறாக சுற்றாடல் மீதான நமது அணுகு முறைகள் எவ்வாறுள்ளன என்பதைப் பற்றியும் மக்கள் சிந்திக்க வேண்டியுள்ளது.

சுற்றாடல் பாதுகாப்புக்கான சட்டங்கள் தற்போதும் உள்ளன. அவற்றுக்கு மதிப்பளிக்க சகலரும் கற்றுக்கொள்ள வேண்டும். சமூகம், பாடசாலை மற்றும் மாகாண மட்டங்களில் இது குறித்த தெளிவு இன்றியமையாதது அவசியமாகும். அதேபோல் சுற்றாடல் தொடர்பில் நாம் கொண்டுள்ள தெளிவு போதுமானதல்ல. சிலர் விலங்கினங்களே சுற்றாடல் என்று கருதுகின்றனர்.

அதற்கப்பாற்பட்ட பல்வேறு விடயங்கள் சுற்றாடலில் காணப்படுகின்றன. அவை அனைத்தினதும் முக்கியத்துவத்தை நாம் உணர மறுப்பதால்தான் சுற்றாடல் பாதுகாப்பற்றுப் போகிறது. இது பற்றிய புரிதல்களை சமூகத்தின் மத்தியில் ஏற்படுத்த வேண்டியது அவசியம்.

சுற்றாடலின் பெறுமதியான அம்சங்களை உயிர்ப்புள்ள விடயங்களாகப் பெயரிடுவதானது வரவேற்புக்குரியதாகும். சிகிரியா போன்ற சொத்துகளை அழித்துவிட முடியாது என்பதை சகலரும் அறிவோம். அதேபோன்று நக்கீல்ஸ் மலைத்தொடரையும் பாதுகாத்துக்கொள்ள வேண்டியது அவசியம். அந்த வகையில் நாட்டின் இயற்கை வளங்களைப் பாதுகாப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கொள்ளும் முனைப்பு காலோசிதமானதும் பாராட்டத்தக்கதுமாகும்.

அடுத்த வருடம் இந்நாட்டில் காலநிலை அனர்த்தங்கள் தொடர்பான பல்கலைக்கழகம் ஒன்றை உருவாக்க ஜனாதிபதி முயற்சிக்கிறார் என்று அறியக் கிடைத்தது. அதனால் முழு உலகமும் இலங்கையின் பக்கம் திரும்பிப் பார்க்கும். வேறு நாட்டிலுள்ள விஞ்ஞானிகள் நமது நாட்டுக்கு வந்து ஆய்வுகளை மேற்கொள்வர். அறிவை மேம்படுத்திக்கொண்டால் மாத்திரமே காலநிலை அனர்த்தங்களுக்கு முகம்கொடுக்க முடியும்.

புத்தகங்களுக்கு மாத்திரம் மட்டுப்பட்டு கிடக்காமல் பாடசாலை மட்டத்திலிருந்து சுற்றாடல் கற்கைகளை நடைமுறைப்படுத்த வேண்டும். இவை அனைத்தையும் ஒரே நாளில் செய்துவிட முடியாது. என்றாலும், இலக்கு ஒன்றுடன் முன்னோக்கி நகர வேண்டியுள்ளது. விலங்கினங்கள், மர வகைகள், உட்பட எமது சுற்றாடலில் காணப்படும் பெறுமதிமிக்க வளங்களைப் பாதுகாக்க வேண்டியது இன்றியமையாத ஒன்று. சுய ஒழுக்கத்துடன் அந்தச் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியது அவசியமாகும் - என்றார்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று வீதம் (06.06.2023)

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 187.2104 | 198.6967 |
| கனேடியன் டொலர் | 210.5036 | 223.2380 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 39.3044 | 42.4294 |
| யூரோ | 303.9065 | 320.8870 |
| ஜப்பான் யென் | 2.0341 | 2.1451 |
| சிங்கப்பூர் டொலர் | 209.8803 | 222.2044 |
| ஸ்ரேலிங் பவுன் | 353.3969 | 371.9711 |
| சுவிஸ் பிராங்க் | 312.0375 | 331.6176 |
| ஐ.அ. டொலர் | 284.8487 | 297.9434 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 773.2678 |
| குவைட் | குவைட் தினார் | 947.4547 |
| ஓமான் | ஓமான் றியால் | 757.2108 |
| கட்டார் | கட்டார் றியால் | 79.9620 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 77.7423 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 79.3763 |

# நூருல் அயினின் "பூஞ்செண்டு" வெளியீடும் தமிழ்மணி மானா மக்கீனுக்கு பாராட்டு விழாவும்





(எம். நசார்)

கலாபூஷணம் நூருல் அயின் நஜ்முல் ஹுசைன் எழுதிய "பூஞ்செண்டு" கவிதை நூல் வெளியீடும் மூத்த ஆளுமை தேசத்தின் கண், தமிழ்மணி மானா மக்கீனின் பிறந்தநாள் நிகழ்வும் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை கொழும்பு 8, அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளன கேட்போர் கூடத்தில் இடம்பெற்றன.

அல் - ஹிதாயா கல்லூரியின் முன்னாள் அதிபர் நாகூர் உம்மா காதர் தலைமையில் சத்திய எழுத்தாளர் எஸ். ஐ. நாகூர் கனி, கலைவாதி கலீல் ஆகியோரின் முன்னிலையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தென்கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமிய கற்கைகள் அரபு மொழி பீட முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் எம். எஸ். எம். ஜலால்தீன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

இதன்போது "பூஞ்செண்டு" நூலின் முதல் பிரதியை தேசத்தின் கண், தமிழ்மணி மானா மக்கீன் பெற்றுக்கொண்டார்.

86ஆவது அகவையை அடைந்திருக்கும் மானா மக்கீன் இதன்போது பொன்னாடை போர்த்தி சந்தன மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டார்.

இதன்போது மானா மக்கீனுக்கு நஜ்முல் ஹுசைன் நூருல் அயின் தம்பதி நினைவுச் சின்னத்தையும் பரிசுகளையும் வழங்கியதுடன் பிரதம அதிதி பேராசிரியர் எம். எஸ். எம். ஜலால்தீன் பொன்னாடை போர்த்த சந்தன மாலையை சட்டத்தரணி ரஷீத் எம். இம்தியாஸ் அணிவித்தார். மானா மக்கீனின் துணைவியார் அஸ்தா மக்கீனும் இதன்போது இணைந்து கொண்டார்.

சட்டத்தரணி ரஷீத் எம். இம்தியாஸ் வரவேற்புரை நிகழ்த்த வாழ்த்துரைகளை கலைவாதி கலீல், பாரம்பரியம் புகழ் எம். எஸ். எம். ஜின்னா ஆகியோர் வழங்கினர். பிரபல பாடகியும் சிரேஷ்ட வானொலி கலைஞருமான இசைக்கோகிலம் நூர்ஜஹான் மர்சூக் வாழ்த்துப்பாடல் இசைக்க வலம்புரி கவிதா வட்ட செயலாளர் இளநெஞ்சன் முர்ஷிதீன், கலாபூஷணம் மஸீதா அன்சார், ரினூஃபா பிர்தௌஸ் ஆகியோர் வாழ்த்துக்கவிதை பாடினர். கவிதாயினி சுஹைதா ஏ. கரீம் தியத்தலாவ எச். எம். ரிஸ்னாவின் கவிவாழ்த்தை வாசித்தார். பன்னூலாசிரியர் ரிம்ஸா முஹம்மத் நூல் நயவுரையாற்றினார். ஏற்புரையை நூலாசிரியர் கலாபூஷணம் நூருல் அயின் நஜ்முல் ஹுசைன் நிகழ்த்தினார். இந்நிகழ்வில் இலக்கிய ஆளுமைகள் கலந்து கொண்டமை சிறப்பம்சமாகும்.

# திருமலை ரொட்டவெவ முஸ்லிம் பாடசாலை மூடப்படும் நிலையில்

## கிழக்கு ஆளுநர் கவனத்திற்கொள்ள வேண்டுமென பெற்றோர் கோரிக்கை

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை வடக்கு கல்வி வலயத்துக்குட்பட்ட ரொட்டவெவ முஸ்லிம் மகா வித்தியாலயம் மூடப்படும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக குற்றஞ்சுமத்தியுள்ள பெற்றோர்கள், பாடசாலையிலுள்ள பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்துதர வேண்டுமெனவும் கிழக்கு ஆளுநரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.



அநுராதபுரம் - திருகோணமலை ஆகிய மாவட்டத்தின் எல்லையாகக் காணப்படும் ரொட்டவெவ கிராமத்தில் ரொட்டவெவ முஸ்லிம் மகா வித்தியாலயம் அமைந்துள்ளது. திருகோணமலை வடக்கு கல்வி வலயத்தில் இரண்டு முஸ்லிம் பாடசாலைகள் காணப்படுவதுடன் அதில் மிக முக்கியமான பாடசாலையாக ரொட்டவெவ முஸ்லிம் மகா வித்தியாலயம் காணப்படுகின்றது.

இப்பாடசாலை க.பொ.த. உயர்தரம் வரை தரமுயர்த்தப்பட்டிருக்கின்ற நிலையில், பாடசாலைக்கு 20 ஆசிரியர்கள் தேவைப்படுகின்றபோதிலும் 13 ஆசிரியர்களே கடமையாற்றி வருகின்றனர். இதில் இரண்டு ஆசிரியர்கள் வெளிநாடு சென்றுள்ளதுடன் மற்றுமொரு ஆசிரியை ஆசிரியர் கலாசாலைக்குச் சென்றுள்ளார்.

அத்துடன், தற்போது கடமையில் உள்ள 13 ஆசிரியர்களில் நால்வர் உட்பட தற்போதைய அதிபரும் இடமாற்றம் பெற்றுச் செல்வதற்கு விண்ணப்பித்துள்ள நிலையில், இவர்கள் அரசியல்வாதிகளின் செல்வாக்குடனேயே இடமாற்றம் பெற்றுச் செல்வதற்கு முயற்சி செய்து வருவதாகப் பெற்றோர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அதேநேரம், 240 மாணவர்கள் கல்வி பயின்று வந்த நிலையில், பெற்றோர் தமது பிள்ளைகளின் விடுகைப் பத்திரங்களைப் பெற்று வேறு பாடசாலைகளில் சேர்ப்பதும் நடைபெற்று வருகின்றது.

விவசாயம், மீன்பிடி மற்றும் சேனைப் பயிர்ச்செய்கையை நம்பி வாழ்ந்து வரும் இம்மக்களின் பிள்ளைகளின் கல்வி நிலை கேள்விக்குறியாகக் காணப்படுகின்றது. அதேநேரம், பாடசாலையின் முகப்புத் தோற்றம், வளாகம், விளையாட்டு மைதானம் போன்றவற்றின் நிலை பார்ப்பதற்கு மிகவும் மோசமாகவும் காணப்படுகின்றது.

பெற்றோர் மற்றும் ஆசிரியர் சங்கங்கள் இருந்தபோதிலும் பாடசாலையின் குறைபாடுகள் குறித்து பாடசாலை நிர்வாகம் பெற்றோர்களுக்குத் தெளிவுபடுத்தாமல் தாங்கள் இருக்கும் வரை இருந்து விட்டுச் செல்வோம் என்ற போக்கில் செயற்பட்டு வருவதாக பழைய மாணவர் சங்கப் பிரதிநிதியொருவர் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் குறிப்பிடுகையில், பாடசாலையில் பெற்றோர் அபிவிருத்திச் சங்கக் கூட்டம் நடத்தப்படும்போது பாடசாலை அதிபருக்கேற்ற விதத்தில் நிர்வாகத்தைத் தெரிவு செய்து வருகின்றனர். பழைய மாணவர்களுக்கு கூட பாடசாலையின் குறைபாடுகள் குறித்து தெரியப்படுத்துவதில்லை.

அத்துடன், பாடசாலை மாணவர்களின் ஒழுக்கம், கலாசார விழுமியங்கள் என எந்தவித செயற்பாடுகள் குறித்தும் பெற்றோருக்கோ அல்லது பழைய மாணவர்களுக்கோ பாடசாலை நிர்வாகம் தெரியப்படுத்துவதில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

திருகோணமலை வடக்கு கல்வி வலயத்தில் இரண்டு முஸ்லிம் பாடசாலைகள் காணப்படுகின்ற போதிலும் அப்பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை அதிகளவிலேயே காணப்படுகின்றது. பாடசாலையின் அபிவிருத்தி மற்றும் குறைபாடுகள் குறித்து வலயக் கல்விப் பணிமனைக்கு தெரியப்படுத்துவதற்கு பெற்றோர்களுக்கோ அல்லது பழைய மாணவர்களுக்கோ பாடசாலை அதிபரால் சந்தர்ப்பம் வழங்கப்படுவதில்லை எனவும் குற்றம் சுமத்தப்படுகின்றது.

ஆகவே, இனிவரும் காலங்களிலாவது வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மாணவர்களின் நலன் கருதி செயற்பட வேண்டுமெனவும் பெற்றோர்கள் கேட்டுக்கொள்கின்றனர்.

மாணவர்களின் நலன் கருதி கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மற்றும் கிழக்கு மாகாணக் கல்வியமைச்சின் செயலாளர், திருகோணமலை வடக்கு கல்வி நிலையப் பணிப்பாளர் உட்பட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மூடப்படும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ள குறித்த பாடசாலையை கவனத்திலெடுத்து தேவையான அபிவிருத்திகளை மேற்கொண்டு பற்றாக்குறையாகவுள்ள ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கின்றனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு மரநடுகைத் திட்டம் முன்னெடுப்பு



(பாறுக் ஷிஹான்)

உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு ‘இயற்கையின் சுவாசத்தை வளர்ப்பதற்கான ஒரு பெருநிறுவன சமூகப்பொறுப்பு’ எனும் தொனிப்பொருளில் 10 ஆயிரம் மரங்களை நடுதல் நிகழ்வு சியபத நிறுவனத்தின் ஏற்பாட்டில் பல்வேறு இடங்களில் திங்கட்கிழமை (05) முன்னெடுக்கப்பட்டது.

அம்பாறை மாவட்டம் கல்முனைப் பகுதியில் அமைந்துள்ள 18ஆவது விஜயபாகு காலாட் படைப்பிரிவில் ஆரம்பகட்ட மரநடுகை முன்னெடுக்கப்பட்டது. இதன்போது கல்முனை இராணுவ முகாமின் இரண்டாவது நிர்வாகக் கட்டளை அதிகாரி மேஜர் தயானந்த மற்றும் சியபத நிதி நிறுவனத்தின் கிழக்கு மாகாணத்துக்குப் பொறுப்பான பிராந்திய முகாமையாளர் முஹம்மட் பிரிம்சாத், அந்நிறுவனத்தின் கல்முனைக் கிளை முகாமையாளர் முஹம்மட் பாயிஸ், ஊழியர்களான ஏ.ஜவாத், எம்.ரி.எம்.முஜீப், ஏ.ஆதீஸ், வி.திசிதரன், எஸ்.அஜய், என்.பவாகரன், ஏ.ஏ.ஏ.றிஹான் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அதன் தொடர்ச்சியாக கல்முனை கடற்படை முகாமிலும் இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது குறித்த முகாமின் கட்டளையிடும் அதிகாரி பி.இ.எம்.டி.தம்மிக கலந்துகொண்டு உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

இதேவேளை, சாய்ந்தமருது கோட்டக்கல்வி அதிகாரி என்.எம்.எம்.மலீக் தலைமையில் சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தியாலயத்திலும் மர நடுகைத் திட்டமானது முன்னெடுக்கப்பட்டது. இதன்போது சாய்ந்தமருது கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த 09 பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டு பெறுமதிவாய்ந்த மரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் சியபத நிதி நிறுவனத்தின் கிழக்கு மாகாண பிராந்திய முகாமையாளர் முஹம்மட் பிரிம்சாத், சியபத நிதி நிறுவனக் கிளை முகாமையாளர் முஹம்மட் பரீஹ், கல்முனை கிளை முகாமையாளர் முஹம்மட் பாயிஸ், ஊழியர்களான ஏ.ஜவாத், எம்.ரி.எம்.முஜீப், ஏ.ஆதீஸ், வி.திசிதரன், எஸ்.அஜய், என்.பவாகரன், ஏ.ஏ.ஏ.றிஹான் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த மரநடுகைத் திட்டத்தில் தென்னை, மா, தோடை, மாதுளை, ஜம்பு, முந்திரிகை உள்ளிட்ட மரங்கள் உள்வாங்கப்பட்டு பாடசாலை வளாகத்தில் நடப்பட்டதுடன் இராணுவத்தினர், கடற்படையினர், அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் இதில் பங்கேற்றிருந்தனர்.

எதிர்காலத்தில் சூழலை பசுமையாக்கும் திட்டத்தின் கீழ் பொது இடங்கள், கடற்கரைப் பிரதேசங்கள், அரச நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், மத ஸ்தாபனங்கள், வயல் காணிகள் உள்ளிட்ட சகல இடங்களிலும் பொதுமக்களின் பங்களிப்புடன் இத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அட்டாளைச்சேனையில் சுற்றாடல் தின நிகழ்வுகள்



(திராய்க்கேணி செய்தியாளர்)

சர்வதேச சுற்றாடல் தினத்தை முன்னிட்டு அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அகமது ஷாபிர் தலைமையில் பிளாஸ்ரிக் கழிவுப் பொருட்கள் முகாமைத்துவ தினம் மற்றும் சுற்றாடல் தினம் என்பன கொண்டாடப்பட்டன.

இந்நிகழ்வில் விசேட பேச்சாளராக அம்பாறை மாவட்ட சிரேஷ்ட சுற்றுச்சூழல் அதிகாரி எம்.ஐ.எம்.இஷ்ஹாக் கலந்து கொண்டார். அத்துடன், உதவிப் பிரதேச செயலாளர் நஹிஜா முசாபிர், நிர்வாக உத்தியோகத்தர் சலீம், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எல்.ஏ.மஜீத், கிராம நிர்வாக உத்தியோகத்தர் ஏ.எல்.ஜௌபர், பிரதேச செயலக சுற்றுச்சூழல் அபிவிருத்தி உத்தியோகத்தர்களான எம்.பி.பிர்தௌசியா, எச்.எப்.பாஹிரா, எம்.ஐ.எவ்.ஹரிசா, பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் அட்டாளைச்சேனை பிரதேச கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். இதன்போது மர நடுகையும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.



கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மாகாண தகவல் தொழில்நுட்ப அதிகாரிகளை சந்தித்து கலந்துரையாடல் மேற்கொண்டார். திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் நடைபெற்ற இக்கலந்துரையாடலின்போது ஆளுநர் குறைதீர்க்கும் மையத்தில் மக்களின் பிரச்சினைகளை உடனுக்குடன் சம்பந்தப்பட்ட அமைச்சின் கவனத்துக்கு கொண்டு சென்று தீர்விணைப் பெற்றுத் தருவதற்காக தொழில்நுட்ப அதிகாரிகளை இணைப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது. (மீனோடைக்கட்டு செய்தியாளர்)

# வாவிக்கரையோரங்களை பாதுகாக்கும் விழிப்புணர்வு




(மட்டக்களப்பு)

தேசிய சுற்றாடல் வாரத்தை முன்னிட்டு ‘காத்தான்குடி வாவிக்கரையோரத்தை அண்மித்துக் காணப்படும் வீதியில் பொலித்தீன், பிளாஸ்ரிக் பாவனையை குறைப்போம்’ எனும் தொனிப்பொருளில் இடம்பெற்ற விழிப்புணர்வு ஊர்வலம் திங்கட்கிழமை(05) இடம்பெற்றது.

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் மட்டக்களப்பு மாவட்ட அலுவலகத்தின் ஏற்பாட்டில் காத்தான்குடி கோட்டக் கல்வி அலுவலகத்தின் ஒத்துழைப்புடன் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பங்குபற்றிய இந்நிகழ்வில் காத்தான்குடி மீரா பாலிகா தேசிய பாடசாலை மற்றும் ஆரையம்பதி மாவிலங்கைத்துறை விக்னேஸ்வரா வித்தியாலய மாணவிகள் பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் பாவனையினால் ஏற்படும் விளைவுகள் தொடர்பாகத் தெளிவூட்டியதுடன் பதாகைகளையும் ஏந்தியவாறு பங்கேற்றிருந்தனர்.

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் மட்டக்களப்பு மாவட்ட அலுவலக பிராந்திய சுற்றாடல் அதிகாரி ரஜனி பாஸ்கரன் மற்றும் ஆசிரியர்கள், பிரதேச நலன் விரும்பிகள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# கரித்தாஸ் நிறுவன ஏற்பாட்டில் சுற்றுச்சூழல் தின நிகழ்வுகள்



(கல்லடி செய்தியாளர்)

சர்வதேச சூழல் பாதுகாப்புத் தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு கரித்தாஸ் எகெட் நிறுவனத்தின் ஏற்பாட்டில், திங்கட்கிழமை (05) மட்டக்களப்பில் சிறப்பு நிகழ்வுகள் இடம்பெற்றன.

ஆரம்ப நிகழ்வாக சைக்கிள் பூங்காவிலிருந்து ஆரம்பமான நடைபவனி காந்திப் பூங்கா வளாகத்தை வந்தடைந்தது. அங்கு சர்வதேச சூழல் பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு நிர்மாணிக்கப்படவுள்ள விழிப்புணர்வுத் தூபிக்கான அடிக்கல் சமயத் தலைவர்கள், பிரமுகர்கள் மற்றும் மாணவர்களால் நடப்பட்டது.

பின்னர் அங்கிருந்து ஆரம்பமான நடைபவனி சார்ள்ஸ் மண்டபத்தை வந்தடைந்து அங்கு அதிதிகள் வரவேற்கப்பட்டனர். இதன்போது இயக்குனர் அருட்தந்தை ஏ.யேசுதாசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், மதகுருக்கள், மத்திய சுற்றாடல் அதிகார சபை உதவி இயக்குனர் எஸ்.கோகுலன், கரித்தாஸ் ஸ்ரீலங்கா சூழல் பாதுகாப்புத் திட்டத் தலைமை அதிகாரி எம்.சஜித் சில்வா, மட்டக்களப்பு மறை மாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை ஜி.அலெக்ஸ் றொபேட், எகெட் நிறுவன அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில், சர்வதேச சூழல் பாதுகாப்புத் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கு அதிதிகளால் பரிசில்களும் வழங்கப்பட்டன.



கோறளைப்பற்று மத்தி வாழைச்சேனை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பிறைந்துறைச்சேனை 206 சீ கிராம சேவகர் பகுதியில் இந்த வருட பெப்ரவரி மாத சமுர்த்தி வீடமைப்பு லொத்தரில் வெற்றி பெற்ற பயனாளி ஒருவருக்கு வீடு நிர்மாணிக்கப்பட்டு திங்கட்கிழமை(05) கையளிக்கப்பட்டது. இதன்போது சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர் எம்.எல்.ஏ.மஜீத், சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எல்.ஐயூப்கான், பிரிவு உத்தியோகத்தர் ஏ.சி.சாதிக்கீன் ஆகியோர் கலந்து கொண்டனர். (மீராவோடை செய்தியாளர்)

# கல்விப் புலமையாளர்கள் கௌரவிப்பு



(வெல்லாவெளி, துறைநீலாவணை செய்தியாளர்கள்)

வரலாற்றுச் சிறப்புமிக்க துறைநீலாவணை கண்ணகியம்மன் ஆலயத்தின் வருடாந்த திருச்சடங்கின் வட்டுக்குத்துதல் பூஜையை சிறப்பிக்கும் வகையில் நிர்வாகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட கல்விப் புலமையாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு திங்கட்கிழமை(05) ஆலயத் தலைவர் மு.தருமரெத்தினம் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பட்டிருப்பு வலயக்கல்விப் பணிப்பாளர் சிவானந்தம் சிறீதரன், பிரதிக்கல்விப் பணிப்பாளர் திருமதி ஜெயந்திமாலா பிரியதர்சன், அம்பாறை, பொத்துவில் லகுகல பிரதேச செயலாளர் எஸ்.நவநீதராஜா, இலங்கை தேசிய கல்வி நிறுவனத்தின் ஓய்வுநிலைப் பணிப்பாளர் வைரமுத்து விஜயலெட்சுமி, முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் கே.சரவணமுத்து மற்றும் ஊடகவியலாளர்கள், ஆலயங்களின் தலைவர்கள், ஆன்மீக அதிதிகள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள், அடியார்கள் கலந்துகொண்டனர்.

துறைநீலாவணை கண்ணகியம்மன் ஆலயத்தின் முழுமையான நிதிப்பங்களிப்புடன் நடைபெற்ற இந்நிகழ்வில், தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 12 மாணவர்களும் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் சித்திபெற்ற 9 மாணவர்களும் உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகி படித்துக்கொண்டிருக்கும் 14 பல்கலைக்கழக மாணவர்களுமாக 35 மாணவர்கள் அதிதிகளினால் பாராட்டி, பரிசுப்பொருட்கள் வழங்கப்பட்டன. இதில் கலந்துகொண்ட அதிதிகளும் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

**தம்பலகாமம் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பத்தினிபுரம் பாலம்போட்டாறு சௌபாக்கியா உற்பத்திக் கிராமத்தின் நிலக்கடலை அறுவடை செவ்வாய்க்கிழமை(06) இடம்பெற்றது. சிறு தோட்ட உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் முகமாக குறித்த பகுதியில் நிலக்கடலை அறுவடைக்கான உதவிகள் வழங்கப்பட்டு தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகள் இதன்மூலம் பாரிய விளைச்சலைப் பெற்றுள்ளனர். குறித்த நிகழ்வில் தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி, பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் ஐ.முஜீப் உட்பட பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், சக விவசாய போதனாசிரியர் எனப் பலர் கலந்து கொண்டனர்.**

(கிண்ணியா செய்தியாளர்)



# கனரக வாகனத்துடன் வேன் மோதி விபத்து

## இருவர் பலி: மூவர் வைத்தியசாலையில் அனுமதி





(கந்தளாய் செய்தியாளர்)

திருகோணமலை - கண்டி பிரதான வீதியில் கனரக வாகனமொன்றுடன் வேன் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் ஸ்தலத்திலேயே பலியாகியுள்ளதாக ஹபரன பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்துச் சம்பவம் செவ்வாய்க்கிழமை (06) காலை அலுத்ஓயா, சிங்ககம பகுதியில் இடம்பெற்றுள்ளதாகவும் கொழும்பிலிருந்து கிண்ணியாவுக்குச் சென்ற வேன் ஒன்றும் திருகோணமலையிலிருந்து கொழும்புக்கு சீமெந்து மூடைகளை ஏற்றிச்சென்ற கனரக வாகனமொன்றுமே இவ்வாறு மோதி விபத்துக்குள்ளாகியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். இவ்விபத்தில் கிண்ணியா பகுதியைச் சேர்ந்த 45 மற்றும் 47 வயதுடைய இருவரே பலியாகியுள்ளனர்.

வேனில் பயணித்த மற்றொருவர் பலத்த காயங்களுடன் அதிதீவிர சிகிச்சைப் பிரிவிலும் கனரக வாகனத்தின் சாரதியும் உதவியாளரும் காயங்களுக்குள்ளாகியுள்ள நிலையில் தம்புள்ளை வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்துச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹபரன பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கிழக்கு மாகாண அபிவிருத்தி தொடர்பில் ஆளுநருடன் தௌபீக் எம்.பி. சந்திப்பு



(கிண்ணியா, சீனக்குடா, மீனோடைக்கட்டு செய்தியாளர்கள்)

கிழக்கு மாகாண அபிவிருத்திப் பிரச்சினைகள் தொடர்பில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் ஆகியோருக்கிடையிலான கலந்துரையாடல் செவ்வாய்க்கிழமை(06) இடம்பெற்றது.

கொழும்பிலுள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைமைக் காரியாலயத்தில் இடம்பெற்ற குறித்த சந்திப்பின்போது அனைத்து தரப்பினருடனும் இணைந்து பணியாற்றக்கூடிய ஒருவர் கிழக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டிருப்பது மகிழ்ச்சியான விடயமெனவும் அவரை மக்கள் முழுமையாக ஆதரிப்பதாகவும் தெரிவித்த தௌபீக் எம்.பி., தனது வாழ்த்துகளையும் பகிர்ந்துகொண்டார்.

இச்சந்திப்பில், கிழக்கு மாகாண அபிவிருத்தி, மாகாணத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை, காணிப் பிரச்சினைகள், வெளிநாட்டு முதலீடுகள் சம்பந்தமாகவும் விரிவாக கலந்துரையாடப்பட்டன. இச்சந்திப்பின்போது அமைச்சர் ஜீவன் தொண்டமான் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் ராமேஸ்வரன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# சாய்ந்தமருதில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம்



(சாய்ந்தமருது, மாளிகைக்காடு செய்தியாளர்கள்)

டெங்கு ஒழிப்புக்கான கொத்தணி சுத்திகரிப்பு வேலைத்திட்டம் சாய்ந்தமருது பிரதேசத்தில் செவ்வாய்க்கிழமை(06) முன்னெடுக்கப்பட்டது.

நாட்டில் டெங்கு நோய்த் தாக்கம் தீவிரமடைந்து வருவதைக் கருத்திற்கொண்டு கிழக்கு மாகாண ஆளுநரின் அறிவுறுத்தலின்பேரில் கல்முனை மாநகர சபையினால் டெங்கு ஒழிப்பு வாரம் பிரகடனம் செய்யப்பட்டு, இரண்டாம் நாள் நிகழ்வாக இச்சுத்திகரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தலைமையில் மாநகர சபையின் சுகாதாரப் பிரிவு பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் யூ.எம்.இஸ்ஹாக், சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களான எம்.என்.எம்.பைலான், ஏ.எல்.எம்.ஜெரீன், ஏ.எல்.எம்.அஸ்லம், மாநகர சபையின் திண்மக்கழிவு முகாமைத்துவ மேற்பார்வையாளர் எம்.அத்ஹம் மற்றும் வலய மேற்பார்வையாளர்களும் இவற்றை நெறிப்படுத்தியிருந்தனர்.

அத்துடன் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் டெங்கு நுளம்பு களப் பரிசோதனை உத்தியோகத்தர்கள் இதன்போது சுற்றுச்சூழல்களில் பரிசோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்த அதேவேளை, சாய்ந்தமருது பொலிஸ் நிலையப் பொலிஸாரும் கலந்து கொண்டு இவ்வேலைத்திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்கியிருந்தனர்.

கொத்தணி வேலைத்திட்டத்தின் கீழ் கல்முனை மாநகர சபையின் 04 வலயங்களுக்குமான அனைத்து திண்மக் கழிவகற்றல் வாகனங்களும் ஆளணியினரும் முழுமையாகக் களமிறக்கப்பட்டு, சாய்ந்தமருது வலயத்தின் அனைத்து பகுதிகளிலும் குப்பைகளைச் சேகரித்து அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தோமஸ் தங்கத்துரை காலமானார்



(எருவில் செய்தியாளர்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தோமஸ் தங்கத்துரை வில்லியம் செவ்வாய்க்கிழமை(06) காலமானார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் உபதலைவரான இவர், அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராகவிருந்த க.பத்மநாதன் காலமானதையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்தையடுத்து பாராளுமன்றம் சென்றவர்.

வைத்தியரான இவர் போர்ச் சூழல் நிலவிய காலத்தில் பிரஜைகள் குழுவில் இணைந்து பணியாற்றியவர். மேலும் கல்முனைப் பிரதேசத்திலுள்ள பல்வேறு சமூக நல அமைப்புகளில் இணைந்து சமூக நலப் பணியில் ஈடுபட்டவர்.

துறைநீலாவணைக் கிராமத்தை பூர்வீகமாகக் கொண்ட இவர் தற்சமயம் பாண்டிருப்பில் வசித்து வந்த நிலையில் சிறிது காலம் சுகவீனமுற்றிருந்து காலமானார். அன்னாரின் பூதவுடல் நல்லடக்கம் இன்று புதன்கிழமை(07) பாண்டிருப்பில் இடம்பெறும்.

# சாய்ந்தமருது மஸ்ஜிதுல் ஆரிபீனில் புனித ஹஜ் வழிகாட்டல் கருத்தரங்கு

(பொலிவேரியன் செய்தியாளர்)

சாய்ந்தமருது - மாளிகைக்காடு சமூக வழிகாட்டல் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட புனித ஹஜ் யாத்திரை வழிகாட்டல் கருத்தரங்கு - 2023 சாய்ந்தமருது மஸ்ஜிதுல் ஆரிபீன் (மக்காம்) பள்ளிவாசலில் அண்மையில் இடம்பெற்றது.

சமூக வழிகாட்டல் அமைப்பின் தலைவரும் சாய்ந்தமருது மஸ்ஜிதுல் ஷுஹதாப் பள்ளிவாசலின் பேஷ் இமாமுமான அல்-ஹாபிழ் மௌலவி ஏ.எஸ்.எம். நவாஸ் (சஃதி) தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், காத்தான்குடி ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலின் பிரதம இமாம் ஜாமிஉழ்ழாபிரீன் அஷ்-ஷெய்க் ஏ.எல்.எம்.பாயிஸ் (ஹுமைதி) இந்நிகழ்வில் வளவாளராகக் கலந்து கொண்டார்.



இதன்போது இம்முறை புனித ஹஜ் யாத்திரையை மேற்கொள்ளும் 30 பேர் கலந்து கொண்டதோடு, ஹஜ் யாத்திரை பற்றிய வழிகாட்டல் நூல் ஒன்றும் வழங்கப்பட்டு பல சந்தேகங்களுக்கு செய்முறை விளக்கத்துடன் கூடிய பூரண விளக்கங்களும் அளிக்கப்பட்டன.

# சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு ஆயிரம் மரங்கள் நடும் திட்டம்



(மட்டக்களப்பு)

உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு ஆயிரம் மரங்கள் நடும் வேலைத்திட்டம் மட்டக்களப்பில் திங்கட்கிழமை(05) முன்னெடுக்கப்பட்டது.

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு கல்லடி முகத்துவாரம் கடற்கரைப் பகுதியில் குறித்த ஆயிரம் மரம் நடும் வேலைத்திட்டம் அசட்லைன் பினான்ஸ் நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்டது.

அசட்லைன் பினான்ஸ் நிறுவனத்தின் முகாமையாளர் மிலங்கடி சில்வா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் எஸ்.ராஜ்குகன், மட்டக்களப்பு மாவட்ட கரையோரம் பேணல் திணைக்களத்தின் பிராந்திய பொறியியலாளர் துளசிதாசன், மட்டக்களப்பு மாநகர சபை ஆணையாளர் மதிவண்ணன், டேவிட் பீரிஸ் மற்றும் அசட்லைன் பினான்ஸ் நிறுவனங்களின் அதிகாரிகள், ஊழியர்கள், கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள உத்தியோகத்தர்கள், ஊடகவியலாளர்கள், மீனவர்கள், பாடசாலை மாணவர்கள் உள்ளிட்டவர்கள் இதன்போது கலந்துகொண்டு மரங்களை நாட்டி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

# முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தோமஸின் மறைவு பேரிழப்பாகும்

## முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் அனுதாபம்

பாண்டிருப்பைச் சேர்ந்த அம்பாறை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தமிழரசுக்கட்சி ஆயுட்கால உறுப்பினரும் முன்னாள் கல்முனைத் தொகுதித் தலைவருமான வைத்தியர் அமரர் தோமஸ் தங்கத்துரை வில்லியத்தின் இறப்பு எமக்கு பாரிய பேரிழப்பாகும் என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தமிழரசுக் கட்சி ஊடக செயலாளருமான பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

அவரின் மறைவு தொடர்பாக மேலும் கூறுகையில், இலங்கை தமிழரசுக் கட்சி பற்றாளராக இருந்த தோமஸ் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளராக கடந்த 2004இல் நிறுத்தப்பட்டார். அம்பாறை மாவட்டத்தில் 2004இல் இடம்பெற்ற பொதுத்தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மூலமாக வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டு விருப்பு வாக்கு அடிப்படையில் வெற்றி பெற்றவர் காரைதீவைச் சேர்ந்த பத்மநாதன். இரண்டாவது நிலையில் இருந்தவர் திருக்கோயிலைச் சேர்ந்த சந்திரநேரு. மூன்றாவது இடத்தில் இருந்தவர் பாண்டிருப்பைச் சேர்ந்த வைத்தியர் தோமஸ் தங்கத்துரை வில்லியம்.

இதில் மாமனிதர் அரியநாயகம் சந்திரநேரு,2004 பெப்ரவரி 08ஆம் திகதி அப்போது விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட அரசியல் பொறுப்பாளராக செயற்பட்ட கௌசல்யன் உட்பட ஏழு பேருடன் அவரின் வாகனத்தில் வன்னியில் இருந்து மட்டக்களப்பு நோக்கிவரும்போது வெலிகந்த வீதியில் இடைமறிக்கப்பட்டு தமிழ் ஆயுதக் குழுவால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக எம்முடன் செயற்பட்ட வீடமைப்பு அதிகார சபையின் மாவட்டப் பணிப்பாளராக இருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினரான காரைதீவு க.பத்மநாதன் 2009 மே 19இல் இந்தியாவில் தமது சொந்த விடயமாகச் சென்றிருந்த நிலையில் இயற்கை மரணமெய்தினார். அவரின் வெற்றிடத்துக்கு அம்பாறை மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விருப்பு வாக்கு அடிப்படையில் மூன்றாவது இடத்தில் இருந்த பாண்டிருப்பைச் சேர்ந்த அமரர் தோமஸ் தங்கத்துரை வில்லியம் 2009 மே 25இல் பாராளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்று எம்முடன் இணைந்து பணியாற்றினார்.

இவரை அம்பாறை மாவட்ட இலங்கை தமிழரசுக் கட்சித் தலைவராக உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்தனர்.

2015ஆம் ஆண்டு வரை அம்பாறை மாவட்டத் தலைவராகப் பணிபுரிந்தார். துணிச்சலும் - நேர்மையும் - தமிழ்த் தேசியப் பற்றும் கொண்ட இவர், அம்பாறை மாவட்டத்திலுள்ள பல நில அபகரிப்புகள், திட்டமிட்ட குடியேற்றங்கள் தொடர்பாகவும் அபிவிருத்திகள் தொடர்பாகவும் பாராளுமன்றத்தில் உரையாற்றியுள்ளார்.

சிறந்த கைராசி வைத்தியராக பாண்டிருப்பில் அவருடைய வீட்டில் மக்களுக்கான வைத்திய சேவைகளைப் புரிந்து பின்தங்கிய கிராம மக்களின் நன்மதிப்பைப் பெற்றவராகத் திகழ்ந்தார். அரசியல், சமூக, வைத்தியத்துறைகளில் தன்னை அர்ப்பணித்து பல பணிகளை ஆற்றிய தோமஸ் தங்கத்துரை வில்லியத்தின் இழப்பு எமது தமிழ்த் தேசிய அரசியலில் பேரிழப்பாகும் - என்றார்.

## போடியார் புலம்பல்!



**குற்றச்செயல்களில் ஈடுபடும் எம்.பிக்களை நீக்குவதற்கு சட்டத்தில் இடம் வேணுமாம் எண்டு நல்லாட்சில அமைச்சராக இருந்த லக்ச்மன் கிரியல்ல எம்.பி. சொல்லியிருக்காரு எலுவா? நீங்க அமைச்சராக இருக்ககுள உங்கட நல்லாட்சியில எம்.பிமார் கொச்சிக்காய் தூள பாராளுமன்றத்துக்க கொண்டுவந்து எறிந்தவங்க எலுவா..? இது சட்டத்தில இருக்கா தமிழ் எம்.பிமார கடந்த 2004, காலத்தில சுட்டுத்தள்ளின ஒட்டுக்குழு உறுப்பினர் இராஜாங்க அமைச்சராக இருக்கிற அரசில எப்படி அப்பு சட்டத்த திருத்திறது.**

# பொலித்தீன் பாவனையிலிருந்து விடுபடுவதற்கான வழிகாட்டல்





(மட்டக்களப்பு)

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக்பாவனையிலிருந்து விடுபடுவதற்கான வழிகாட்டலை வழங்கும் சுற்றாடல் தின விழிப்புணர்வு மற்றும் ஊர்வலம் திங்கட்கிழமை(05) மட்டக்களப்பில் நடைபெற்றது.

மத்திய சுற்றாடல் அதிகார சபை, மண்முனை வடக்கு பிரதேச செயலகம், மட்டக்களப்பு மாநகர சபை ஆகியன இணைந்து Child fund மற்றும் AU Lanka ஆகியவற்றின் ஒத்துழைப்பு மற்றும் நிதி அனுசரணையில் குறித்த விழிப்புணர்வு நிகழ்வு மட்டக்களப்பு கோட்டைப் பூங்காவில் இடம்பெற்று அங்கிருந்து மட்டக்களப்பு மணிக்கூட்டுக்கோபுரம் வரை சென்றது.

'பிளாஸ்ரிக் மூலம் ஏற்படக்கூடிய மாசினை தடுப்போம்' எனும் தொனிப்பொருளில் AU Lanka நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளர் க.கஜேந்திரன் தலைமையில் இடம்பெற்ற குறித்த விழிப்புணர்வு நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா கலந்துகொண்டார்.

சிறப்பு அதிதிகளாக மட்டக்களப்பு சிறைச்சாலையின் அத்தியட்சகர் நல்லையா பிரபாகரன், மத்திய சுற்றாடல் அதிகார சபையின் உதவிப்பணிப்பாளரும் Child Fund நிறுவனத்தின் நிகழ்ச்சித்திட்டப் பணிப்பாளருமான விஜயபால சின்னத்தம்பி, மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி சசிகலா புண்ணியமூர்த்தி, 231ஆவது இராணுவப் படைப்பிரிவின் உயரதிகாரிகள், மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் கிராம உத்தியோகத்தர்களுக்கு பொறுப்பான நிர்வாக உத்தியோகத்தர் கே.ராஜன் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

'இயற்கையை நாம் நேசிப்போம் - இயற்கை எம்மை நேசிக்கும்' எனும் வகையிலான ஆலோசனையை அதிதிகள் தமது உரையினூடாக வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதன்போது விழிப்புணர்வு ஊர்வலம் முன்னெடுக்கப்பட்டதுடன், நான்கு குழுக்களாக பிரிந்து கோட்டைப் பூங்கா, கல்லடி கடற்கரை, லேடி மெனிங் வீதி மற்றும் காந்தி பூங்காவை அண்மித்த பகுதிகளில் காணப்பட்ட பிளாஸ்ரிக் பொருட்களைச் சேகரிக்கும் நடவடிக்கையையும் முன்னெடுத்திருந்தனர்.

இந்நிகழ்வுகளில் பிரதேச சுற்றாடல் முன்னோடி பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், மண்முனை மேற்கு - வவுணதீவு இளைஞர் யுவதிகள், இராணுவத் தரப்பினர் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

# ஆழ்கடலுக்குச் சென்ற இளம் குடும்பஸ்தர் உயிரிழப்பு

(மீராவோடை செய்தியாளர்)

வாழைச்சேனை துறைமுகத்திலிருந்து மீன்பிடிக்க ஆழ்கடலுக்குச் சென்ற இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ள சம்பவம் செவ்வாய்க்கிழமை(06) அதிகாலை இடம்பெற்றுள்ளது.

இயந்திரப் படகில் மூன்று மீனவர்கள் ஆழ்கடலுக்குச் சென்றபோது அதில் ஒருவர் படகில் ஆழ்ந்த நித்திரையில் இருந்துள்ளார்.

இதனையடுத்து குறித்த நபரை எழுப்பிய ஏனைய மீனவர்கள் அவர் மரணமடைந்திருப்பதைக் கண்டு துறைமுக அதிகாரிகளுக்கு தகவல் வழங்கியதைத் தொடர்ந்து சடலத்தை கரைக்கு கொண்டுவர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வாறு மரணமடைந்த நபர் ஓட்டமாவடி 3ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த 33 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையாவார். இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



**சர்வதேச சுற்றாடல் தினத்தை முன்னிட்டு கல்முனை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மர நடுகை மற்றும் சிரமதான நிகழ்வு திங்கட்கிழமை(05) இடம்பெற்றன. கல்முனை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் தலைமைக் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஐ.எம்.பரீட் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.(பொத்துவில் செய்தியாளர்)**

# ஒடிசா ரயில் விபத்து தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்த சி.பி.ஐ.

## விபத்து ஏற்பட்டு 48 மணிநேரத்தின் பின்னர் ஒருவர் உயிருடன் மீட்பு





ஒடிசா ரயில் விபத்து சம்பவம் தொடர்பாக சி.பி.ஐ., அதிகாரிகள் விசாரணைகளை தொடங்கியுள்ளனர்.

இந்நிலையில், விபத்து இடம்பெற்ற இடத்திலுள்ள புதர் பகுதியிலிருந்து 48 மணி நேரம் கழித்து பயணியொருவர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளமை நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஒடிசாவின் பாலசோர் மாவட்டத்தில் கடந்த 2ஆம் திகதி மூன்று ரயில்கள் மோதி விபத்துக்குள்ளாகின. இதில் 278 பேர் உயிரிழந்துள்ளதுடன் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். இச்சம்பவம் உலகம் முழுவதும் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது. இந்நிலையில், விபத்து குறித்து சி.பி.ஐ. விசாரணைக்கு மத்திய அரசு பரிந்துரை செய்தது.

இந்நிலையில், ஒடிசா சென்ற சி.பி.ஐ. அதிகாரிகள், அம்மாநில பொலிஸாரிடமிருந்து ரயில் விபத்து தொடர்பான ஆவணங்களை பெற்றுக் கொண்டனர். தொடர்ந்து விசாரணையை ஆரம்பித்துள்ள அவர்கள், விபத்து இடம்பெற்ற இடத்துக்குச் சென்று ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர்.

இந்த வழக்கில் சி.பி.ஐ. விசாரணை முக்கியமானது எனக்கூறியுள்ள ரயில்வே அதிகாரிகள், அதன்மூலம் இந்த விபத்தில் சதிச்செயல் நடந்துள்ளதா என்பது குறித்து கண்டுபிடிக்க முடியும் எனவும் தெரிவித்துள்ளனர்.

விபத்து இடம்பெற்ற பகுதியிலிருந்து 48 மணிநேரம் கழித்து பயணியொருவர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளார்.

கடந்த 2ஆம் திகதி இடம்பெற்ற ரயில் விபத்தைத் தொடர்ந்து போர்க்கால அடிப்படையில் மீட்புப் பணிகள் நடைபெற்றன. ரயில் பெட்டிகள் மோதிய வேகத்தில் ஒன்றன் மேல் ஒன்றாக மோதி உருக்குலைந்தன. இதனால் உயிரிழந்த பல பயணிகளை அடையாளம் கூட காண முடியவில்லை. அந்தளவுக்கு உடல்கள் சிதைந்து போயிருந்தன. காயமடைந்தவர்களுள் பலர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டனர். விடிய விடிய மீட்புப் பணிகள் கிட்டத்தட்ட இரு நாட்களாக நடைபெற்றன.

இனி எவரும் உயிருடன் இருக்க வாய்ப்பில்லை. எனவே மறுசீரமைப்பு பணிகளை தொடங்கலாம் என தேசிய பேரிடர் மீட்புக்குழு ஞாயிற்றுக்கிழமை மாலை தெரிவித்து அதில் கவனம் செலுத்த ஆரம்பித்தது. மீட்புக்குழுவை சேர்ந்த ஆயிரக்கணக்கானவர்கள் உருக்குலைந்து கிடந்த பெட்டிகளை இயந்திரங்கள் மூலம் ட்ரில் செய்து அகற்றும் பணிகளில் ஈடுபட்டிருந்தபோது அங்கு பணியிலிருந்த பொலிஸாக்கு திடீரென ஒரு சத்தம் கேட்டது.

மிகவும் சோர்வாக அந்தக் குரல் இருந்தது. உடனே உன்னிப்பாக கவனித்தபோது கவிழ்ந்து கிடந்த ஒரு பெட்டிக்கு அருகேயிருந்த புதருக்குள் இருந்து சத்தம் கேட்டுள்ளது. உடனே ஓடிச்சென்ற பொலிஸார் காயங்களுடன் கிடந்த ஒருவரை மீட்டுள்ளனர். உடனடியாக அவரை சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

விபத்து இடம்பெற்று 48 மணி நேரம் கழித்து பயணி ஒருவர் உயிருடன் மீட்கப்பட்டது மீட்புப் பணியில் இருந்தவர்களுக்கும் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ரயில் பெட்டி மோதும் போது அந்தப் பயணி புதருக்குள் தூக்கி வீசப்பட்டு படுகாயமடைந்திருக்கலாம் என்று பொலிஸால் தெரிவித்தனர். இவ்வாறு மீட்கப்பட்ட அந்தப் பயணி அசாமை சேர்ந்த துலால் மச்சும்தார் (வயது 35) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

# மன்னார் வளைகுடாவில் அழிவின் விளிம்பில் டொல்பின்



மன்னார் வளைகுடாவில் இராமநாதபுரம் மாவட்ட கடல்பகுதியில் அழிவின் விளிம்பில் டொல்பின்கள் இருப்பது ஆய்வில் தெரியவந்துள்ளது.

மன்னார் வளைகுடாவில் தனுஷ்கோடி முதல் ரோஜ்மா நகர் வரையிலான இராமநாதபுரம் மாவட்டத்தின் நீண்ட நெடிய கடற்கரைப்பகுதி 130 கிலோமீற்றருக்கு பரந்து விரிந்து காணப்படுகிறது. இது அரிய வகை கடல்வாழ் உயிரினங்களின் வாழ்விடமாக திகழ்கிறது.

இயற்கை பாதுகாப்பு அரணாக கடல் பவளப்பாறைகள் (கோரல்ஸ்) காணப்படுகின்றன. மண்டபம், கீழக்கரை, சாயல்குடி வனச்சரகத்தில் 21 தீவுகள் உள்ளன. கடலிலிருந்து 4 முதல் 15 நாட்டிக்கல் மைல் தொலைவில் இவை அமைந்துள்ளது.

மன்னார் வளைகுடா பகுதியில் தீவுகளை ஒட்டிய இடங்களில் அரியவகை டொல்பின்கள் காணப்படுகின்றன. ஒரு சில தடை செய்யப்பட்ட வலைகளை விரிப்பதை வாடிக்கையாகக் கொண்டுள்ள மீனவர்களால் டொல்பின்கள் அழிவை சந்திக்கின்றன.

இதுகுறித்து இயற்கை வளம் பாதுகாக்கும் சமூக ஆர்வலர்கள் தெரிவிக்கையில்,

''சுருக்கு மடி, இழுவை மடி, கரைவலைகளை கடலுக்குள் மற்றும் தீவுக்கு மிக அருகில் விரிப்பதால் சிறு மீன்களை மட்டுமே உண்டு வாழும் டொல்பின்கள் கூட்டமாக வந்து வலையில் மாட்டிக்கொண்டு இறக்கின்றன. டொல்பின்களின் மகத்துவத்தை அறிந்த சில மீனவர்கள் அவற்றை மீண்டும் கடலுக்குள் விடுகின்றனர். அதை உணராதவர்களால் அரியவகை கடல்வாழ் உயிரினங்களான கடல் ஆமை, கடல் பசு, டொல்பின்கள் பெருக்கமும் வாழ்விடங்களும் அழிவை சந்திக்கின்றன.

கடந்த பத்தாண்டுகளில் 100இற்கும் மேற்பட்ட டொல்பின்கள் வலைகளில் சிக்கி உயிரிழந்துள்ளன. எனவே, இதுகுறித்த விழிப்புணர்வை மீன்வளத்துறை சார்பில் மீனவர்களுக்கு ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றனர்.

## உலக செய்திகள்

# ருசிக்கும் மோனாலிசா



மந்திர புன்னகையால் மயக்கும் மோனாலிசா இந்திய உணவை ருசித்து உண்ணுவதைப் போன்ற புகைப்படமொன்று தற்போது இணையத்தில் வைரலாகிவருகிறது.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் வந்ததன் பின்னர் உலகம் ஒரே மாதிரியாக இல்லை. ஏ.ஐ.தொழில்நுட்பம், பல வேலைகளுக்கு அச்சுறுத்தலாக இருந்தாலும் மற்றவர்கள் அதனை கல்வி, பொழுதுபோக்குக்காக பயன்படுத்துகின்றனர். தற்போது இணையத்தில் பல்வேறு செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் உருவாக்கிய புகைப்படங்கள் அவ்வப்போது வைரலாகி வருகின்றன.

இத்தாலியை சேர்ந்த பிரபல ஓவியர் லியானர்டோ டாவின்சி வரைந்த மோனாலிசா ஓவியம் உலகப்புகழ் பெற்றது. மர்ம புன்னகையுடன் மோனாலிசா இருப்பார். அதுபோன்ற புகைப்படத்தை ஏ.ஐ. தொழில்நுட்பக் கருவிகளைப் பயன்படுத்தி, மோனாலிசா இந்திய உணவை ருசிப்பது போன்ற படத்தை பிரபல சமையற்கலைஞர் விகாஷ் கன்னா பகிர்ந்திருந்தார்.

''செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப மென்பொருளானது, வார்த்தை அடிப்படையில் யதார்த்தமான படங்களை உருவாக்க மக்களுக்கு உதவுகிறது. அதில், நான் இதை செயற்கை நுண்ணறிவு மூலம் உருவாக்கினேன். மோனாலிசா இந்திய உணவை ருசிக்கிறார்'' - என்று பதிவிட்டிருந்தார். இந்தப் பதிவு நெட்டிசன்களின் கவனத்தை ஈர்த்துள்ளது.

# ஐந்து பதக்கங்களுடன் நான்காமிடத்தில் இலங்கை



20ஆவது ஆசிய இளையோர் மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடரின் இறுதிநாள் போட்டிகள் இன்று நடைபெறுகின்ற நிலையில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற 4X400 மீற்றர் கலப்பு அஞ்சலோட்டப் போட்டியில் களமிறங்கிய இலங்கை அணி தங்கப் பதக்கம் வென்று அசத்தியது. போட்டியை நிறைவு செய்ய 3 நிமிடங்கள், 25.410 செக்கன்களை இலங்கை அணி எடுத்துக் கொண்டது.

இளையோர் மெய்வல்லுனர் கலப்பு அஞ்சலோட்டத்தில் இலங்கை அணியினால் பதிவு செய்யப்பட்ட அதிசிறந்த நேரப் பெறுதியாக இது இடம்பிடித்தது. இதேவேளை, மகளிருக்கான 800 மீற்றர் ஓட்டத்தில் இலங்கையின் தருஷி கருணாரத்னவும் தங்கப்பதக்கம் வென்றார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் தென் கொரியாவின் யெச்சியோன் நகரில் நடைபெற்றுவரும் போட்டிகளில் நேற்று மூன்றாம் நாள் மாலை வரையான போட்டி முடிவுகளின்படி, பதக்கப் பட்டியலில் இலங்கை 2 தங்கம், ஒரு வெள்ளி மற்றும் 2 வெண்கலத்துடன் மொத்தமாக 5 பதக்கங்களை வென்று நான்காமிடத்தில் காணப்படுகிறது.

### ஒருநாள் தொடரை கைப்பற்றப்போவது யார்?

# வெற்றியாளரை தீர்மானிக்கும் இறுதி ஆட்டம் இன்று



சுற்றுலா ஆப்கானிஸ்தான் அணிக்கும் இலங்கை அணிக்கும் இடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச தொடரின் தொடர் வெற்றியாளரை தீர்மானிக்கும் இறுதி ஆட்டம் இன்று காலை 10 மணிக்கு ஹம்பாந்தோட்டை மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் ஆரம்பமாகிறது.

முதல் ஆட்டத்தில் ஆப்கானிஸ்தான் அணி 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்ற நிலையில், கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இரண்டாவது ஆட்டத்தில் இலங்கை அணி 132 ஓட்டங்களினால் அபார வெற்றியீட்டி தொடரை 1-1 என சமநிலைப்படுத்தியது.

இந்நிலையில், தொடர் வெற்றியாளரை தீர்மானிக்கும் மூன்றாவதும் இறுதியுமான ஆட்டம் இன்று நடைபெறுகிறது. இந்த ஆட்டத்தில் வெற்றிபெறும் அணி தொடரை 2-1 என்ற அடிப்படையில் கைப்பற்றும். ஆப்கான் அணி தொடரை வெல்லும் பட்டத்தில் முதல் முறையாக இலங்கை அணியுடன் தொடரை வென்று வரலாறு படைக்க காத்திருக்கிறது.

## விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

# 15 ஆண்டு ஒலிம்பிக் சம்பியன் காலமானார்



உலகின் அதிவேக மனிதராக 15 ஆண்டுகளாக திகழ்ந்த ஒலிம்பிக் சம்பியன் ஜிம் ஹெய்ன்ஸ் நேற்று தனது 76ஆவது வயதில் காலமானார். 100 மீற்றர் ஓட்டப் பந்தயத்தை 10 வினாடிகளுக்குள் முடித்த முதல் மனிதர் இவர் என்று கூறப்படுகிறது.

ஹெய்ன்ஸ் அமெரிக்க சம்பியன்ஷிப் 100 மீற்றர் ஓட்டத்தில் 9.9 வினாடிகளில் சாதனை படைத்தார். 1968ஆம் ஆண்டு மெக்சிகோ நகரில் 100 மீற்றர் ஓட்டப் பந்தயத்தை 9.95 வினாடிகளில் முடித்தார். அவரது ஒலிம்பிக் சாதனை 1983இல் அமெரிக்கன் கால்வின் ஸ்மித்தால் முறியடிக்கப்பட்டது.

### டெஸ்ட் உலகை ஆழப்போவது யார்?

# டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப்போட்டி இன்று ஆரம்பம்



இரண்டாவது ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் (2021 - 2023) சம்பியனை தீர்மானிக்கும் இறுதி ஆட்டம் இன்று லண்டனில் ஆரம்பமாகிறது. இலங்கை நேரப்படி பிற்பகல் 3.00 மணிக்கு ஆரம்பமாகும் இறுதிப்போட்டியில் ரோஹித் சர்மா தலைமையிலான இந்திய அணியும் - பெட் கம்மின்ஸ் தலைமையிலான அவுஸ்திரேலிய அணியும் பலப்பரீட்சை நடத்துகின்றன.

இன்று ஆரம்பமாகும் இந்த ஆட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறும். முன்னதாக கடந்த 2019 - 2021 காலப்பகுதியில் முதலாவதாக நடைபெற்ற டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரில் இந்திய அணியை வீழ்த்தி நியூசிலாந்து அணி சம்பியனாக முடிசூடியது. இறுதிப்போட்டியில் தோல்வியடைந்த இந்திய அணி இரண்டாவது தடவையாக இன்று இறுதிப்போட்டியில் ஆஸி. அணியை எதிர்த்தாடுகிறது.

முதல் பருவகாலத்தில் வழங்கப்பட்ட பரிசுத்தொகையிலிருந்து ஐ.சி.சி. எந்தவித மாற்றங்களையும் ஏற்படுத்தவில்லை. ஐ.சி.சி. டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரில் பங்கேற்ற அனைத்து அணிகளுக்குமான மொத்த பரிசுத்தொகையாக 3.8 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இறுதிப்போட்டியில் இந்தியா மற்றும் அவுஸ்திரேலிய அணிகள் மோதவுள்ள நிலையில், வெற்றிபெறும் அணிக்கு 1.6 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வழங்கப்படவுள்ளதுடன், இரண்டாவது இடத்தை பிடிக்கும் அணிக்கு 8 இலட்சம் அமெரிக்க டொலர்கள் வழங்கப்படவுள்ளன.

# வெற்றியின் ரகசியத்தை வெளிப்படுத்திய ஜோகோவிச்

(ரமணி)



பிரான்ஸில் நடைபெற்றுவரும் பிரெஞ்ச் ஓபன் 2023 இல் மார்டன் ஃபுசோவிக்ஸுக்கு எதிரான இரண்டாவது சுற்று ஆட்டத்தின் போது சேர்பிய டென்னிஸ் நட்சத்திரம் நோவக் ஜோகோவிச்சின் மார்பில் ஒரு சிறிய, மர்மமான பொருள் இருப்பது பலரால் கவனிக்கப்பட்டது.

இது விளையாட்டில் செயல்திறனை அதிகரிக்கப் பயன்படுத்தப்படும் நானோ தொழில்நுட்ப சாதனம் என்று கூறப்படும் நிலையில், எனது தொழில் வாழ்க்கையின் மிகப்பெரிய ரகசியம். சிறுவயதில் நான் அயர்ன் மேனை மிகவும் விரும்பினேன், அதனால் நான் அயர்ன் மேனாக மாற செய்ய முயற்சிக்கிறேன் என்று ஜோகோவிச் கூறியுள்ளார்.

தாவோ டெக்னாலஜிஸ் என்ற இத்தாலிய நிறுவனம், மனித ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வுக்கான புதுமையான நானோ தொழில்நுட்ப சாதனங்களை காப்புரிமை பெற்று உருவாக்குவதில் நிபுணத்துவம் பெற்றுள்ளது. இதுவே ஜோகோவிச் பயன்படுத்தும் தொழில்நுட்பத்தின் பின்னாலும் இருப்பதாகக் கூறியுள்ளது.

Taopatch என்பது காப்புரிமை பெற்ற நானோ தொழில்நுட்ப சாதனமாகும். இது உங்கள் உடலில் உள்ள வெப்பத்தை ஒளியாக மாற்றி அதனை நரம்பு மண்டலத்துக்கு அனுப்புகிறது என்று ஜோகோவிச் நெஞ்சில் சிப் இருக்கும் புகைப்படங்கள் ட்விட்டரில் வைரலான பிறகு, அந்த நிறுவனம் இந்த சாதனம் பற்றிய கூடுதல் விபரங்களை வெளியிட்டது. உங்கள் உடலில் இருந்து வெப்பத்தை ஒளியாக மாற்றும் நானோகிரிஸ்டல்கள் இதில் உள்ளன (இது இருட்டில் ஒளிரும்). இந்த ஒளி உங்கள் உடலில் உள்ள குறிப்பிட்ட குத்தூசி மருத்துவப் புள்ளிகளுக்கு அனுப்பப்படுகிறது. இது உடலின் மற்ற பகுதிகளுடன் இயற்கையாக எவ்வாறு தொடர்புகொள்வது என்பதை உங்கள் உடல் நினைவில் கொள்ள உதவுகிறது. இது உடல்நலத்தில் சமநிலை மற்றும் சிறந்த தூக்கம், கவனம், தடகள செயல்திறன், வலி நிவாரணம் மற்றும் பலவற்றுக்கும் நிறைய ஆரோக்கிய நன்மைகளுக்கும் வழிவகுக்கிறது என்று நிறுவனத்தின் வலைத்தளம் தெரிவித்துள்ளது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7